விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: பத்து

சங்கு 07 | வள்ளுவர் ஆண்டு 2037 | ஆனி 01 | வியாழக்கிழமை (15.06.2006) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 178

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## கட்டுநாயக்காவில் காக்க வைக்கப்பட்ட விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள்

### திட்டமிட்ட செயலென குற்றஞ்சாட்டு

(கிளிநொச்சி)

ஒஸ்லோவில் நடைபெற்ற கண்காணிப் பாளர்களின் மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் நேற்று கிளிநொச்சியை வந்தடைந்தனர்.

இவர்கள் நேற்றுக் காலை 9 மணியளவில் கட்டுநாயக்காவை வந்தடைந்த போதும் அவர்கள் நீண்ட நேரம் காக்கவைக்கப்பட்டதாகதெரிவிக்கப்பட்டது. இதுவேண்டுமென்றேதிட்டமிட்ட செயல் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எனினும் பிற்பகல் 2.10 மணியளவில் விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் மூலம் அவர்கள் கிளிநொச்சியை வந்தடைந்தனர்.

அவர்களுடன் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் உடன் வந்தனர். நோர்வேக்கான பயணத்தினை மேற்கொண்டிருந்த தமிழீழ அரசியல் (10 ஆம் பக்கம் பார்க்க)

## கொட்டடிப் பகுதியில் நேற்று குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

கொட்டடி ஆஸ்பத்திரி வீதியில் வைத்து குடும்பஸ்தர் ஒருவர் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். முத்தமிழ் வீதியைச் சேர்ந்த பாலிப் மரியநாயகம் (வயது 56) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள தேசிய சேமிப்பு வங்கியில் பணம் எடுத்துக் கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த போது காலை 11 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவரை சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றதாக தெரிவிக்கப்பட்டது.

சதோச விற்பனைநிலையத்தில் கடமையாற்றி இவர் அதிலிருந்து ஓய்வுபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் சிறிநிதி நந்தசேகரன் விசாரணைகளை மேற் கொண்டதுடன் பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ச-52,132,133)

# முட்டுக்கட்டை, தடைகள் நீக்கப்படாமல் புலிகள் பேச்சுக்கு செல்லமாட்டார்கள்

## தமிழ்ச்செல்வன் உறுதிபடத் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

எம்மீது ஏற்படுத்தப்பட்டுள்ள முட்டுக்கட்டைகள், தடைகள் நீக்கப்படாமல் நாங்கள் பேச்சுக்கு செல்லமாட்டோம் என விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

ஒஸ்லோவுக்குச் சென்றுவிட்டு நேற்று கிளிநொச்சிக்குத் திரும்பியபோது அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் இவ்வாறு தெரிவித்தார். ஐரோப்பிய தடைக்குப்பின்னால் புலிகள்மீது கடுமையான அழுத்தங்களை பிரயோகிக்கும் உத்திகள் கையாளப்படுகின்றன. அர்த்தமற்ற அழுத்தங்கள் தமிழர் தரப்பையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் ஒருபோதும் அடிபணியச் செய்துவிடமுடியாது என அவர் தெரிவித்துள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)



## க.கா.குழுவின் அறிக்கைக்கு அரசாங்கம் கண்டனம்

(கொழும்பு)

சமாதான அனுசரணைப் பணிகளில் நோர்வே விடுதலைப்புலிகளை அரசுடன் சமனான அந்தஸ்தில் வைத்து நடத்துவது பற்றி அரசாங்கம் கவலைகொண்டுள்ளது. இது பற்றி தாம் நோர்வேயுடன் விரைவில் பேச இருப்பதாக பாதுகாப்புத்துறை பேச்சாளரும் கொள்கைத்திட்டமிடல் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

'இவ்வாறு செய்வது ஒரு தவறா அல்லது வேண்டுமென்றே செய்யப்படுகிறதாஎன்பது தெரியவில்லை' என அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். கடந்த வாரம் நோர்வே அனுசரணையாளர்களிடம் இருந்து இருதரப்பினருக்கும் 'அனுப்பிவைக்கப்பட்டிருந்த கேள்விக்கொத்து தொடர்பில் கருத்துக்கூறியபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட தரப்பினர் போர்நிறுத்தக் கண்காணிப் (10 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் மங்களவுக்கு எதிராக நோர்வேயில் நேற்றும் ஆர்ப்பாட்டம்

(ஒஸ்லோ)

நோர்வே மன்னரை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நேற்று புதன்கிழமை சந்தித்தபோது பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் மீண்டும் கண்டன எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நோர்வே மன்னர் ஐந்தாம் கறால்ட்டை நேற்று பிற்பகல் 1.45 மணிக்கு அரச மாளிகையில் மங்கள சமரவீர சந்தித்தார்.

இச் சந்திப்பு பிற்பகல் 1.45 மணிமுதல் 2.15 மணிவரை நடைபெற்றது. இனப்படுகொலை நிகழ்த்துகின்ற ஒரு அரசாங்கத்தின் அமைச்சரை நோர்வே மன்னர் சந்திப்பதை எதிர்த்து 400 இற்கும் மேற்பட்ட நோர்வேத் தமிழர்கள் அரச மாளிகையின் முன்திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர். (10 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவம் மீது நேற்றும் பரவலாகத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பலாலி வீதியில் உரும்பிராய்ச் சந்திக்கு அருகே பாதுகாப்புப்பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது நேற்று முற்பகல் 11.45 மணியளவில் அடையாளம் தெரியாத நபர்களால் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் படைத்தரப்பில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் பலாலி இராணுவ வைத்தியசாலையில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவல் படைவீரர் வவு. சுட்டுக்கொலை

வவுனியாவில் ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். வவுனியா மாமடுவ பகுதியில் நேற்றுக் காலை 6.15 மணியளவில் இத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் பலியானவர் ஊர்காவல் படையைச் சேர்ந்த வசந்த சந்தான செனிவிரத்தின (வயது 22) என தெரிய வந்துள்ளது. கொல்லப்பட்ட ஊர்காவல் படையைச் சேர்ந்தவரிடம் இருந்து ரி-56 ரக துப்பாக்கி மற்றும் ரவைகள் பறித்து எடுக்கப்பட்டுள்ளன. (ச-12)

## எழுதுமட்டுவாழில் ஆணின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

எழுதுமட்டுவாழ் முன்னரங்க காவலரணுக்கு வெளிப்புறத்தில் மனித நடமாட்டம் அற்ற யுத்த சூனியப்பிரதேசத்தில் இருந்து ஆணின் சடலம் ஒன்றை மீட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

நேற்று அதிகாலை குறித்த இடத்தில் துப்பாக்கிச்சூட்டுச் சத்தம்கேட்டதாகவும் இதனை அடுத்து இராணுவத்தினர் தேடுதலை மேற்கொண்டபோது இச் (10 ஆம் பக்கம் பார்க்க)

## இளவாலை பொலிஸ் பிக்கப் கிளைமோரில் சிக்கியது

(யாழ்ப்பாணம்)

இளவாலை பெரியவிளான் பகுதியில் பொலிஸ் பிக்கப் வாகனத்தை இலக்குவைத்து நேற்று கிளைமோர்த்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுக் காலை 10.40 மணியளவில் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் இளவாலை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் காயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழர்கள் "ராஜபக்ஷ சகோதரர்களால்" தான் படுகொலை செய்யப்படுகிறார்களாம்

## இப்படிக் கூறுகிறது தமிழர் மனித உரிமை மையம்

இலங்கைத் தீவில் தமிழர்கள் 'ராஜபக்ஷ சகோதரர்களால்' தான் படுகொலை செய்யப்படுகின் றனர் என்று தமிழர் மனித உரிமைகள் மையம் குற்றம் சாட்டியுள்ளது. பிரான்ஸை தலைமையிடமாகக் கொண்டுசெயற்படும்தமிழர்மனித உரிமைகள் மையம் வெளியிட் டுள்ள அறிக்கையில்,

வடக்கு-கிழக்கில் நடைபெறும் அப்பாவி மக்களின் படுகொலை கள் அனைத்துமே தமிழ் மக்களை அச்சம் கொள்ள செய்யும் நோக் குடன் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ, அவரது சகோதரரான பாது காப்பு அமைச்சின் செயலாளர் கோட்டபாயராஜபக்ஷ ஆகியோரது உத்தரவிலேயே நடைபெறுகின்றன.

இப்படுகொலைகளை மேற் கொள்ளும் இராணுவத்துடன்சோந் தியங்கும் துணை இராணுவக் குழுவினருக்கு ஊதியப்பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டு, அதன் அடிப்படையிலேயேஊதியம்வழங் கப்படுகிறது. இலங்கையின் பாது காப்பு அமைச்சினால் இந்தப்பட் டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

கைக்குண்டுத்தாக்குதல் நடத்து வோருக்கு 15 ஆயிரம் ரூபாயும் கிளைமோர்த் தாக்குதல் நடத்து வோருக்கு 20 ஆயிரம் ரூபாவும் தமிழீழ விடுதலைப் போராட்டத் திற்கு ஆதரவாகமுன்னின்றுஉழைப் போரை படுகொலை செய்வோ ருக்கு ஒருலட்சம் ரூபாய் என வழங் கப்படுகிறது. அரச படைகள் தாம் விரும்பியவர்களை வடக்கு-கிழக் கில் கொலை செய்யவும், பாலியல் வன்முறையில் ஈடுபடுத்தவும் ராஜ பக்ஷ சகோதரர்களினால் அனு மதி வழங்கப்பட்டுள்ளது.

தற்போதைய இலங்கையின் பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரிகளாகவும் இலங்கையில் பாதுகாப்பு முடிவுகளை மேற்கொள் பவர்களாகவும் இலங்கையின் தென்பகுதியை சேர்ந்த ராஜ பக்ஷ சகோதரர்களும், அவர்களது முன் னால் பாடசாலை தோழர்களும், நண்பர்களும், உறவினர்களுமே உள்ளனர் என்று அந்த அறிக்கை யில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. (க)


## சிறு விளம்பரம்

### வாடகைக்கு உண்டு

கடை வாடகைக்கு உணடு தொடர்பு கொள்க. பிள்ளை யார் ஸ்ரோர்ஸ் மானிப்பாய். T.P.2227543. (C/34)


## ஆன்மீக நிகழ்வு

தொண்டமனாறுசெல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வெள்ளிக்கிழமை தோறும் நடாத் தப்படும் ஆன்மீக நிகழ்வுத் தொட ரில் நாளை வெள்ளிகிழமை மு.ப. 10.30மணிக்கு கிருபா தவதாசன் பக்கவத்திய சகிதம் பக்திப்பாடல் களை இசைப்பார். (க-35)

# முதியவரின் வயிற்றிலிருந்து கத்தரிக்கோல் மீட்பு

அறுவைச் சிகிச்சையின் போது கவனக்குறைவாக முதிய வரின் வயிற்றுக்குள் வைத்துத் தைக்கப்பட்ட ஐந்தரை அங்குல நீளமுடைய கத்தரிக்கோல் 14 மாதங்களின் பின் மீண்டும் அறுவைச் சிகிச்சை மூலம் அகற் றப்பட்டது.

கேரள மாநிலம் கோழிக்கூட் டைச் சேர்ந்த அச்சுதன் (வயது 65) என்பவரின் வயிற்றுள் இருந்து 5 கிலோ எடையுள்ள கட்டி கடந்த ஏப்ரல்மாதம் அறுவைச்சிகிச்சை மூலம் அகற்றப்பட்டது. இந்த அறு வைச்சிகிச்சையை மேற்கொண்ட டாக்டர்கள் தவறுதலாகக் கத்தரிக் கோலை அச்சுதனின் வயிற்றுக் குள் வைத்துத் தைத்துவிட்டனர்.

கட்டியை அகற்றிய பின்ன ரும் அவர் வயிற்றில் தொடர்ந்தும் வலி இருந்ததால் அச்சுதன் மீது மீண்டும் பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டபோது அவரது வயிற்றுக்குள் ஐந்தரை அங்குல நீளமுள்ள கத்தரிக்கோல் இருப் பது கண்டு பிடிக்கப்பட்டது.

14 மாத காலம் வயிற்று வலியு டன் கஷ்டப்பட்ட அச்சுதன், வயிற் றிலிருந்த கத்தரிக் கோலை அறு வைச் சிகிச்சை மூலம் அப்புறப் படுத்தப்பட்டபின் தற்போது நல்ல நிலைமையில் உள்ளார். (து)

# கஷ்டப்பிரதேச பாடசாலை அதிபர் ஆசிரியர்களுக்கு விசேட கொடுப்பனவு

(கொழும்பு)

கஷ்டப்பிரதேச, அதிகஷ்டப் பிரதேச பாடசாலைகளில் கடமை புரியும் அதிபர், ஆசிரியர்களுக் கான விசேட ஊக்குவிப்பு கொடுப் பனவை வழங்குவதற்கு கல்விய மைச்சு நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது.

கஷ்ட, அதிகஷ்ட பிரதேச பாடசாலைகளில் கடமை புரிபவர் களுக்கு ஊக்குவிப்புக் கொடுப் பனவு வழங்குவதில் நீண்டகால மாக தாமதங்கள் ஏற்பட்டு வந்தன. இது தொடர்பாக ஆசிரியர் தொழிற் சங்கங்கள் செய்த முறையீட்டை யடுத்து திறைசேரிப் பணிப்பாளர் அதற்கான அனுமதியை வழங்கி யிருப்பதோடு அது தொடர்பாக தேவைப்படும் நிதி நிலை அறிக் கையை சமர்ப்பிக்குமாறு கல்வி யமைச்சு மற்றும் மாகாணங்க ளுக்கான பிரதம செயலாளர்க ளுக்கு வேண்டுகோள் விடுத்துள் ளார்.

கஷ்ட பிரதேச, அதிகஷ்ட பிர தேச பாடசாலைகளில் கடமை புரிபவர்களுக்குஊக்குவிப்புகொடுப் பனவு வழங்குவது தொடர்பாக விடுவிக்கப்பட்ட சுற்றறிக்கைக ளுக்கு அமைய சில மாகாண கல்வி அமைச்சுக்கள் தமது பிரதேசத் தில் உள்ள பாடசாலைகளை கஷ்ட, அதிகஷ்ட பிரதேச வரைவிலக் கணத்திற்குஏற்பவரையறைசெய்து அதுதொடர்பான வெளிப்படுத் தலையும் உரிய முறையில் செய்ய வில்லை எனக் கூறப்படுகின்றது.

கஷ்ட பிரதேச, அதிகஷ்ட பிர தேச, பாடசாலைகளில் நிலவி வரும், ஆசிரியர் பற்றாக்குறையை போக்கி அந்தப் பிரதேச மாணவர் களின் கல்வித்தரத்தை மேம்படுத் துவதற்கு வசதியாக ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்குவது என அறிவிக்கப்பட்து.

இதன் அடிப்படையில் அதிகஷ்ட பிரதேச பாடசாலைகளில் கடமை புரிபவர்களுக்குமாதம் 2ஆயிரத்து 500 ரூபாவும் கஷ்ட பிரதேச பாட சாலைகளில் கடமைபுரிபவர்க ளுக்கு ஆயிரத்து 500 ரூபாவும் ஊக்குவிப்பு கொடுப்பனவாக வழங் கப்படவிருக்கிறது. (க-7)

# இராசிபலன்

**15.06.2006**
**(ஆனி 1, வியாழக்கிழமை)**
**சதுர்த்தி மாலை 5.54 மணிவரை**
**திருவோணம் பின்னிரவு 2.36 மணிவரை**
**இராகுகாலம் 1.23-2.53 மணிவரை**
**சுபநேரம் 7.23-8.53 மணிவரை**
**சங்கடகர சதுர்த்தி விரதம்**

| | |
|---|---|
| மேடம் | தூரதேசச் செய்தி, அதிகாரம், எடுத்த காரியம் கைகூடும், கடின முயற்சி. |
| இடபம் | தந்தைவழி உறவு, எடுத்த காரியம் தாம தமாகும், புதிய திட்டமிடல், பிரயாணம். |
| மிதுனம் | ஆரோக்கியக்குறைவு, வீண் பிரச்சினை, காரிய தடங்கல், வாகனபயம். |
| கடகம் | எடுத்த காரியம் கைகூடும், நண்பர்கள் சந்திப்பு, விருந்துபசாரம், பொருள் சேர்க்கை. |
| சிங்கம் | சுவாரஸ்யம், தொழில் நன்மை, நல்ல செய்தி, முயற்சி கைகூடும். |
| கன்னி | தனனம்பிக்கைக்குறைவு, வாக்குமேன்மை, தொழில் சிந்தை, எதிர்பாராத நன்மை. |
| துலாம் | புதிய முயற்சி, சிந்தனை மிகுதி, சுபசெலவு, கல்வியில் ஆர்வம். |
| விருச்சிகம் | அன்னியர் சந்திப்பு, காரிய அனுகூலம், சுபநிகழ்வு, பிரயாணநன்மை. |
| தனுசு | கோபப்படுதல், வேலைச்சுமை, முயற்சி தாமதம், பொருள்விரயம். |
| மகரம் | அதிகாரம், நண்பர்கள் சந்திப்பு, நல்ல முயற்சி, சிந்தனை மிகுதி. |
| கும்பம் | உறவினர் மனஸ்தாபம், காரியதாமதம், சயனக்குறைவு, பிரயாணம். |
| மீனம் | எடுத்த காரியம்கைகூடும், குடும்ப மகிழ்ச்சி, தொழில் நன்மை, போசனசுகம். |

\- வளவன்

# சட்ட விரோதமாக பரீட்சைக்கு தோற்றிய பல்கலைக்கழக மாணவன்

(கொழும்பு)

போலி அடையாள அட்டையை சமர்பித்து கல்விப் பொதுத் தராதர உயர்தரப்பரீட்சைக்கு தோற்றிய ஒரு வரை பரீட்சை திணைக்கள அதிகாரிகள் பொலி ஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

போலி அடையாள அட்டையை சமர்ப்பித்து பரீட் சைக்குத் தோற்றிய பல்கலைக்கழக மாணவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இவர் மற்றுமொரு மாணவர் சார்பில் பௌதீகவியல் பாடத்திற்கான பரீட் சைக்கு தோற்றியிருப்பதாக பரீட்சைகள் திணைக் கள அதிகாரிகள் கூறுகின்றனர். (க)

# க.பொ.த.உயர்தரப்பரீட்சை இன்றுடன் நிறைவு பெறும்

க.பொ.த.உயர்தரப் பரீட்சைகள் இன்று வியாழக் கிழமையுடன் நிறைவு பெறவுள்ளன. இதேவேளை, விடைத்தாள்கள் மதிப்பிடும் முதலாம் கட்டப் பணி கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.


இரண்டாம் கட்டப் பணிகள் இந்த வாரம் ஆரம் பிக்கப்படவுள்ளன. விடைத்தாள்கள் மதிப்பிடும் பணியை 60 நாட்களுக்குள் பூர்த்திசெய்வதே இதன் நோக்கமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார். (க)

# அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரித்தால் மக்கள் முறையிடலாம்

எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் அத்தியாவசியப் பொருட்களின் விலை கள் அதிகரித்தால் உடனடியாக நுகர்வோர் அதிகார சபையிடம் முறையிடுமாறு அதிகாரசபை பொது மக்களுக்கு அறிவித்துள்ளது.

ஏற்கனவே எரிபொருட்களின் விலைகள் அதிக ரிக்கப்படும்போது ஏனைய அத்தியாவசியப் பொருட் களின் விலைகளை அதிகரிக்க வர்த்தகர்களுக்கு எதிராக அதிகாரசபை முறையிடப்பட்டுள்ளதாக அதி காரசபையின் தலைவர் சரத் விஜயசிங்க தெரிவித் துள்ளார்.

எனவே தன்னிச்சையாக பொருட்களின் விலை களை அதிகரிக்க வர்த்தகர்கள் குறித்து 011-2 393577, 011-244589,7 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு முறைப் பாடுகளை தெரிவிக்கலாம் எனவும் அவர் அறிவித் துள்ளார். (க)





நேற்று முன்தினம் இரவு ஸ்ரான்லி வீதியில் ஸ்கை எலக் ரோனிக் சிஸ்ரம் கணனி மென் பொருள் விற்பனை நிலையத்தில் ஏற்பட்ட மின் ஒழுக்குக் காரண மாக கடைக்குள் எரிந்துள்ள பொருட்களை முதல் இரண்டு படங்களிலும் அதனைப் பார்வை யிடுபவர்களை மற்றைய படத்தி லும் காணலாம் அத் தீவிபத்தி னால் எரிந்த பொருட்களின் பெறு மதி 45 இலட்சம் ரூபா என மதிப் பிடப்பட்டுள்ளது.

படங்கள்:- திலீவின்பன்.



# ஒஸ்லோ பேச்சை 'இராஜதந்திர கிளைமோர்' எனக்கூறுகிறது ஜாதிக ஹெல உறுமய

(கொழும்பு)



**நோர்வேயின் தலையீட்டுடன் புலிகளால் விரிக்கப்பட்ட வலையில் அரசாங்கம் முட்டாள் தனமாக சிக்கிக்கொண்டது என்றும் ஒஸ்லோவில் நடைபெறவிருந்த சந்திப்பு அரசாங் கத்திற்கு எதிராக புலிக ளுடன் இணைந்து நோர்வே தரப்பினர் சர்வதேச மட்டத்தில் வைத்த இராஜதந்திர கிளைமோர் குண்டு என்பதை அரசாங்கம் விளங்கிக் கொள்ள வேண்டும் என்றும் ஜாதிகஹெல உறுமய தெரிவித்துள்ளது.**

ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் ஓமல்பே சோபித தேரர் விடுத்துள்ள அறிக் கையில் இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

ஒஸ்லோவில் நடைபெறவிருந்த பேச்சு வார்த்தை முறிவடைந்தமைக்கான முழுப் பொறுப்பையும் நோர்வே தரப்பினரே ஏற்றுக் கொள்ளவேண்டும் பேச்சில் கலந்துகொள் ளாமைக்கு புலிகள் தரப்பினர் முன்வைக் கும் காரணங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் ஒஸ்லோ பேச்சுவார்த்தையில் பங்கு பற்றுகின்ற அரசாங்க தரப்பு பிரதிநிதிகளின் பெயர் விபரங்கள் ஏற்கனவே நோர்வேக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இந்த தரப்பில் அமைச்சர்கள் இணைத் துக்கொள்ளவேண்டும் என்று புலிகள் கூறிய தாக நோர்வே தரப்பினர் அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தவில்லை. இந்நிலையில் இப் பேச்சிலிருந்து இறுதி சந்தர்ப்பத்தில் புலிகள் விலகிக்கொண்டமை சந்தேகத்தை ஏற்படுத் துகின்றது.

ஒஸ்லோ பேச்சிலிருந்து புலிகள் விலகிக் கொள்ளவார்கள் என்று நோர்வேக்கு ஏற் கனவே தெரிந்திருக்கக்கூடும் என்றும் எண் ணத் தோன்றுகின்றது.

யுத்த நிறுத்த உடன்படிக்கையை புலிகள் தரப்பினரே தொடர்ச்சியாக மீறி வருகின்ற னர். இந்த நிலையில் யுத்த நிறுத்த உடன் படிக் கை மற்றும் கண்காணிப்பு தொடர்பான பேச்சுவார்த்தையினை நோர்வே தரப்பினர் கிளிநொச்சியிலேயே நடத்தியிருக்கலாம்.

ஆனால் அரசாங்கத்தை சர்வதேச ரீதியில் சிக்க வைப்பதற்காகவே நோர்வே தரப்பி னர் இப்பேச்சுவார்த்தையை ஒஸ்லோவில் நடத்த திட்டமிட்டிருந்தனர். இவ்விடயம் குறித்து அரசாங்கத்திற்கு பல முறை எடுத் துரைத்திருந்தோம் யுத்த நிறுத்தகண் காணிப் புக் குழுவினர் முகம் கொடுக்கும் பிரச் சினை குறித்து நடத்தப்படவிருந்த பேச்சுவார்த்தை யில் அரசாங்கத் தரப்பினர் பங்குபற்ற வேண்டிய அவசியம் இல்லையென்பதை யும் தெளி வாக எடுத்துக்கூறியிருந்தோம்.

ஜனநாயகமான அரசாங்கம் இப்பேச்சு வார்த்தையில் கலந்துகொள்ள இயலாது என்று நேரடியாக அறிவிப்பதற்கான பல காரணங்கள் இருந்த போதும் அரசாங்கம் பேச்சில் கலந்துகொள்வதற்கு முனைப்பு டன் செயற்பட்டது.

இலங்கையின் இறைமைக்கு பங்கம் ஏற்படுத்தி புலிகள் விரித்த வலையில் அரசாங் கத்தை சிக்க வைப்பதற்காகவே நோர்வே முயற்சி செய்து வருகின்றது என்பதை தொடர்ச் சியாக அரசாங்கத்திற்கு தெளிவுபடுத்தியி ருந்தோம். நோர்வேயின் உச்சக்கட்ட ஆதர வுடனேயே புலிகள் பேச்சில் பங்குபற்றுவ தற்கு மறுப்பு தெரிவித்திருப்பது தெட்டத் தெளி வாகின்றது.

இப்பேச்சில் பங்குபற்றவிருந்த சுவிடன், டென்மார்க், பின்லாந்து போன்ற நாடுகளைச் சேர்ந்த கண்காணிப்பாளர் களை விலக்கிக் கொள்வதன் ஊடாக கண்காணிப் பாளர்க ளின் செயல்பாட்டை தனது கண் காணிப் பின் கீழ்கொண்டு வருவதற்கு நோர்வே தரப்பினர் முயற்சி செய்திருக்கலாம்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் அரசாங்கம் புலி பயங்கரவாதத்திற்கு பின்னால் செல் லாது இலங்கையின் இறைமையை பாதுகாப் பதற் கும் நாட்டின் கௌரவத்திற்கு இழுக்கு ஏற் படாத வகையிலும் செயல்பட வேண்டும்.

அரசாங்கம் புலிகளுக்கு பின்னால் செல் வதை விடவும் புலிகளின் ஆயுதங்களை கீழே வைப்பதற்கான அழுத்தங்களை கொடுப் பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண் டும். சமாதான முன்னெடுப்பு தொடர்பாக சர்வ தேச சமூகம் அரசாங்கத்தின் மீது அழுத் தங் களை கொடுப்பதை விடவும் புலிகள் ஆயுதங் களை கீழே வைப்பதற்கான சர்வதேச சமூகத் தினூடாக அழுத்தங்களை கொடுப்பதற்கு அர சாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். (க)

# நோர்வேயின் அனுசரணைப்பணி குறித்து அரசும் மக்களும் முடிவெடுக்கவேண்டும்!

## ஜே.வி.பி. எம் .பி கோரிக்கை



(கொழும்பு)

விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்துவர நோர்வேயினால் முடியவில்லை நோர்வே தனது முயற்சியில் தோல்வி கண்டுள்ளது.

இந்நிலையில் தனது அனு சரணைப் பணி தொடர்பில் நோர்வே மீள்பரிசீலனை செய்யவேண்டும் என்று ஜே. வி.பி.யின் குரு ணாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பின ரும் கட்சியின் முக்கியஸ்தருமான அனுர குமார திஸ்ஸநாயக்க கோரிக்கை விடுத்தார்.

சமாதான செயற்பாடுகளில் நோர்வே யின் பங்களிப்புத் தொடர்பாக அரசாங்க மும் நாட்டு மக்களும் சிந்தித்து உறுதியான முடிவொன்றினை எடுக்கவேண்டும் அதற் கான காலம் கனிந்து விட்டது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஒஸ்லோமாநாடு தொடர்பாகவும் சமாதான முயற்சியின் எதிர்காலம் குறித்தும் கருத்து தெரிவித்த போதே அவர் மேற் கண்டவாறு கூறினார். (க)

## அரிப்பு கிராமத்தில் மக்கள் இடம்பெயர்வு

(மன்னார்)

மன்னார் மாவட்டம் அரிப்பு கிராமத்தினை நோக்கி படை யினர் மேற்கொண்ட முன்ன கர்வு முயற்சியினை அடுத்து அப்பகுதி கிராம மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

படையினர் திடீரென கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு தமது முன்னகர்வு முயற்சி யினை மேற்கொண்டனர்.

அச்சங்குளம் சந்தியூடாக அரிப்புக்கு முன் னேற படை யினர் மேற்கொண்ட முயற்சி தொடர்பில் மக்களுக்கு தகவல்கள் கிடைத் தன என்றும் இதனை அடுத்து அப்பகுதி கிரா மத்தினைச் சேர்ந்த 250க்கும் அதிக மான குடும் பங்களைச் சேர்ந்த மக்கள் இடம் பெயர்ந்து புனித செங்கோல் மாதா ஆலயத் தில் தஞ்சமடைந்தனர் என்றும் கூறப்படு கிறது. இருப்பினும் அன்று முற்பகல் மக்கள் தமது பகுதிகளை நோக்கி நகர்ந்துள்ளதாக அங்கிருந்தது கிடைக்கும் தகவல்கள் தெரி விக்கின்றன.

இதனிடையே நறுவிலிக்குளம் பகுதியில் கடற்படை யினர் முகாமிட்டிருப்பதாக தகவல் கள் வெளியாகியுள் ளன. இதனை அடுத்து அரிப்புப் பகுதியைச் சேர்ந்த பெருமளவான மீனவர்கள் மீன்பிடித்தல் நடவடிக்கைக்கு செல்ல அஞ்சுவதாக மீனவர் சங்கப் பிரதிநிதி கள் தெரிவித்துள்ளனர். (க)

# உலக கிண்ணத்தை வென்றால் 2 கோடி ரூபா வழங்கப்படுமாம்

தென்கொரிய அணி உலகக் கிண்ணத் தை வென் றால் அணி வீரர்களுக்கு தலா 2கோடி ரூபாய் பரிசுத் தொகையாக வழங்கப் படும் என்று அந்நாட்டு கால்பந்து சம்மேள னம் அறிவித் துள்ளது.

உலகக்கிண்ண கால்பந்து போட்டியில் கலந்து கொண் டுள்ள 32 நாட்டு கால்பந்து அணிகளுக்குமான பரிசுத் தொகைகளை அந்நாட்டு கால்பந்து சம்மேளனங்கள் அறி வித்துள்ளன. இதில் அணி வீரர்களுக்கு வழங் கப்படவுள்ள அதி கூடிய பரிசுத் தொகையை தென்கொரிய உதைபந்தாட்ட சம்மேளனம் அறிவித்துள்ளது.

இதன்படி தென்கொரிய அணி காலிறுதி சுற்றுக்கு தகுதி பெற்றால் 50 இலட்சம் ரூபா பரிசாக வழங்கப்பட வுள்ளது. இதேபோன்று இறுதி போட்டிக்கு தகுதி பெற்றால் ஒரு கோடி ரூபாய் வழங்கப்படவுள்ளது. சென்றமுறை தனது சொந்த நாட்டில் நடைபெற்ற உலகக் கிண்ண கால்பந்து போட் டியின் போது தென் கொரிய அணி அரையிறுதிவரை முன்னேறி யது. இதற்காக ஒவ்வொரு வீரர்க ளுக்கும் தலா ஒருகோடியே 25 ஆயிரம் ரூபா பரிசாக வழங் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-9)

# பிரான்ஸில் கறுப்பு பட்டியணிந்து கவனயீர்ப்புப் போராட்டம்

(பிரான்ஸ்)

தாயகத்தில் தமிழ் மக்கள் மீது நடாத்தப் படும் மிகக் கொடுமையான படுகொலை களை நிறுத்தக் கோரியும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினை ஐரோப்பிய அரசு தடைசெய்ததைக் கண்டித்தும் நடாத்தப்படும் கறுப்புப்பட்டி அணிந்த கவன யீர்ப்புப் போராட்டத்தை பிரான்ஸில் அனைத்து தமிழ்சங்கங்களின் பொறுப் பாளர்கள் ஒன்று சேர்ந்து ஆரம்பித்து வைத்துள்ளனர்










அதனை தொடர்ந்து பாட சாலை மாணவர்கள், ஆசிரி யர்கள், பெற்றோர்கள் இப் பட்டிகளை அணிந்து கொண்டனர். தாயகத்தில் தொடர்ச்சியாக நடை பெறும் படுகொலைகள்பற்றியசெய்தி களை பிரெஞ்சு மொழியில் தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு சங்கங்கள் ஊடாக பிரெஞ்சு மக்களின் கவனத்தை யீர்க் கும் செயற்பாடுகள் தொடர்ச் சியாக நடந்தவண்ணமுள் ளன.

அத்துடன் பிரான்ஸ் வாழ் தமிழ்மக்கள் தமது வேதனை உணர்வுகளை வெளிப்படுத்தி இளை யோரி னால் தயாரிக்கப்பட்ட 15 ஆயி ரம் வரையிலான அஞ்சல் அட்டைகளை ஐரோப்பிய பாராளுமன்றத்துக்கும் பிரா ன்ஸ் வெளிநாட்டு அமைச் சுக்கும் அனுப்பி வருகின்ற னர்.

இக் கவனயீர்ப்பு போராட் டத்தினையொட்டி வணக் கஸ்தலங்களில், விசேட வழிபாடுகள் கருத்தரங்கு கள் மாநகர அதிகாரிகள் மட்டத்திலான சந்திப்புக்கள் நடைபெறுகின்றன.

தனியார் அமைப் புக்க ளும் இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தினை முன் னெடுத்து வருகின்றன.

வர்த்தகர் சங்கத்தின் வர்த்தக நிறுவனங்களின் ஊடாக கறுப்புகொடிகளை கட்டி தமது உணர்வுகளை வெளிப்படுத்தி உள்ளனர் . இக் கவனயீர்ப்பு நாட்களை மக்கள் பல்வேறு வழி களில் எழுச்சியோடு முன்னெடுத்து வருகின்றனர். (க)

## இன்று ஒரு தகவல்

# முதுமையில் மன நோய்

மனநோய் என்பது ஒரு பொதுவான நோய்தான். இது எல்லோருக்கும் வர வாய்ப்புள்ளது. இருந்தாலும் இளமையின் தொடக்கத்திலும் முதுமையின் தொடக்கத்திலும் இது அதிகமாக ஏற்படுவதுண்டாம். வயதான காலத்தில் இது ஏன் அதிகமாக வருகிறது தெரியுமா? அந்த சமயத்தில் மூளையின் செயல்திறன் பாதிக்கப்படுகிறது. அதனால் மற்றவர்களைவிட இவர்களுக்கு அதிகமாக மன நோய் வருவதற்கு வாய்ப்புள்ளது.

அதுவரையும் தனியாக, சுதந்திரமாக இருந்தவர்கள் வயதான பின்பு அடுத்தவர்களை எதிர்பார்த்திருக்க வேண்டிய சூழ்நிலை சமூக ரீதியாகப் பார்த்தாலும், பொருளாதார ரீதியாகப் பார்த்தாலும், உடல் நல ரீதியாகப் பார்த்தாலும் இவர்கள் மற்றவர்களைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை. சுறுசுறுப்பாக எல்லா வேலையும் செய்து கொண்டிருந்தவர்கள்... சும்மாவே உட்கார்ந்திருக்க வேண்டிய சூழ்நிலை! இதனால் தான் மனம் கெட்டுப்போகிறது.

முதியவர்களுக்கு ஏற்படும் மன நிலைப் பாதிப்பை மூன்று வகையாகப் பிரிக்கிறார்கள். ஒன்று மனக்குழப்பம் **Confusion.** இரண்டாவது அறிவுத்திறன் வீழ்ச்சி **Dementia.** மூன்றாவது மனத்தளர்ச்சி நோய் **Depression.** இரத்தக் குழாயில் ஏற்படும் மாற்றங்களால் மூளைக்குத் தேவையான சத்து குறைந்து போகிறது. இந்த நிலையில் நன்றாக இருக்கும் ஒருவர் திடீரென்று தம்முடைய சுற்றுப்புறத்தையே மறந்துவிடுவார். நாம் எங்கிருக்கிறோம்- என்ன செய்கிறோம்- நம்மைச் சுற்றி என்ன நடக்கிறது?- யார் யார் இருக்கிறார்கள் என்று ஒன்றும் புரியாது.

நேரம், காலம்,இடம் தெரியாமல் அவரும் குழம்புவார். அடுத்தவர்களையும் குழப்புவார். இல்லாததை இருப்பதாக நினைப்பார். பயந்த நிலையிலேயே காணப்படுவார். இந்த நிலை சில நொடிகள் முதல் சில மணிநேரம் வரை நீடிக்கலாம். பின்பு சரியாகிவிடும்.

இப்படி ஏற்படுவதற்கு என்ன காரணம் தெரியுமா? மூளைக்குப் போகும் இரத்தம் திடீரென்று குறைந்துபோகிறது. தூக்க மாத்திரை, நரம்புத் தளர்ச்சிக்குக் கொடுக்கும் மருந்துகளாலும் மனக்குழப்பம் உண்டாகும். உடம்பில் மற்ற பாகங்களில் நோய்க்கிருமிகளின் பாதிப்பு இருந்தாலும் மனக்குழப்பம் வரும். அடிப்படைக் காரணம் என்னவென்று கண்டுபிடித்து அதற்கேற்ற மாதிரி சிகிச்சை கொடுக்கவேண்டும்.

அறிவுத்திறன் வீழ்ச்சி என்று சொல்கிறோமல்லவா **Dementia**. அது எதனால் வருகிறதென்று இன்னும் சரியாகக் கண்டுபிடிக்க முடியவில்லை. அதனால் இதற்கேற்ப சிகிச்சையும் கிடையாது. 40 வயதிற்குப் பின்பு மூளை செல்கள் வீழ்ச்சியடைய ஆரம்பிக்கிறது. தொடர்ந்து வயதாக ஆக அறிவுத்திறனுக்கு உறைவிடமான மூளைச் செல்கள் மேலும் வீழ்ச்சியடைகிறது. அதனால் அறிவுத் திறனிலும் வீழ்ச்சி ஆரம்பமாகி விடுகிறது.

நோயாளியின் மனப்போக்கை குடும்பத்தில் உள்ளவர்கள் எல்லோரும் நன்றாகப் புரிந்துகொண்டு அதற்குத் தகுந்தமாதிரி நடந்து கொள்ளவேண்டும். அதுதான் நாம் அவருக்கு செய்யக்கூடிய பெரிய உதவி.

மனத்தளர்ச்சி நோய் இருக்கிறதே **Depression** அது எப்படி தெரியுமா? இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எந்தக் காரணமும் இல்லாமல் மனம் தளர்ந்துவிடுவார்கள். அவர்கள் மீதே அவர்களுக்கு நம்பிக்கை இருக்காது. அதுமட்டுமல்ல ஏதோ பெரிய தவறு செய்துவிட்டதாக அவர்களே நினைத்துக் கொள்வார்கள். அடுத்தவர்களுக்கு நாம் சுமையாக இருக்கிறோமே என்று நினைத்து ஏங்குவார்கள்.

நமது உடம்பு கெட்டுவிட்டது. நம்மை யாரோ தண்டிக்கப்போகிறார்கள் என்று நினைத்துப் போராடுவார்கள். பல சமயங்களில் இதுபோன்ற நினைப்பினால் தற்கொலை செய்துகொள்ள முயற்சிப்பார்கள். எதிலும் ஆர்வம் இருக்காது. பசி குறையும் அதனால் சாப்பாடும் குறையும். உடல் இளைக்கும். முகத்தில் ஒரு விதமான வெறுப் புணர்ச்சி வெளிப்படும். இரவில் உறக்கம் வராமல் கஷ்டப் படுவார்கள்.

இந்த மனத்தளர்ச்சி நோய்க்கு இப்போது நல்ல மருந்து உண்டு.அதிலேயே குணமாகிவிடும் சிலருக்கு மட்டும் மின் சிகிச்சை தேவைப்படும். ஆக வயதான காலத்தில் உடலையும் மனதையும் நன்கு வைத்துக்கொள்ள வேண்டியது அவசியம். உடல் நன்றாக இருந்தால் மனதும் நன்றாக இருக்கும். சத்துள்ள ஆகாரம் சாப்பிடவேண்டும். முதுமையின் எதிரி தனிமை. அதைத் தவிர்க்கவேண்டும். பேச்சுத் துணைக்கு யாரையாவது தயார் செய்ய வேண்டும். சூழ்நிலைக்கு ஒத்துப்போக வேண்டும்.

ஒரு பாட்டி தன் கணவரை அழைத்துக் கொண்டு டாக்டரிடம் வந்தார். "டாக்டர்! இவரைக் கொஞ்சம் கவனித்துப் பாருங்கள். யாரையாவது எதிரில் பார்த்துவிட்டால் உடனே பேச ஆரம்பித்து விடுகிறார்'' என்றார். "அது ஒன்றும் தப்பில்லையே. தனிமையைத் தவிர்ப்பதற்காக யாரையாவது எதிரில் பார்த்தால் கதைத்திருப்பார்'' என்றார் டாக்டர்.

அதற்கு அந்தப் பாட்டி "அப்படி இல்லை டாக்டர் ! யாராவது மனிதர்களை எதிரில் பார்த்துக் கதைத்தால் பரவாயில்லை. முகம் பார்க்கும் கண்ணாடியை எதிரில் பார்த்தாலும் உடனே கதைக்க ஆரம்பித்து விடுகிறார். அதனால் தான் உங்களிடம் அழைத்துக்கொண்டு வந்தேன்'' என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஈழத்தமிழர்கள் பாதுகாப்பாக தமிழ்நாடு வர இந்திய-இலங்கை அரசுகள் உதவவேண்டும்!

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள்

(சென்னை)

இலங்கையிலிருந்து தமிழ் நாட்டுக்கு ஈழத் தமிழர்கள் பாதுகாப்பாக வர இந்தியா மற்றும் இலங்கை அரசாங்கங்கள் இணைந்து உதவ வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் இந்தியச் செயலாளர் து.ராஜா வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் கடந்த திங்கட்கிழமை ஊடகவியலாளர்களிடம் பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில மாதங்களாக இலங்கையில் அதிகரித்து வரும் வன்முறைகளால் பெரும் எண்ணிக்கையிலான அகதிகள் தமிழ்நாட்டுக்கு வருகின்றனர். அவ்வாறு அகதிகளாக வருகின்ற ஈழத்தமிழர்கள் பாதுகாப்பாக வந்தடைவதற்காக இணைந்த நடவடிக்கை மேற்கொள்வதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு இந்திய அரசாங்கம் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழகத்திற்கு இலங்கை அகதிகள் வருகை அதிகரித்துள்ளது. அவர்கள் தனியார் படகுகளில் ஏறி வரும் போது பல ஆயிரம் பணத்தை கொடுத்து வருகிறார்கள். இதற்கு தீர்வுகாண மத்திய மாநில அரசுகள் இலங்கை அரசிடம் பேசி தீர்வுகாண வேண்டும்.

இலங்கை அரசு அகதிகளை பாதுகாப்பாக அனுப்பி வைக்கவேண்டும். இல்லையேல் இந்திய அரசு அகதிகளை பாதுகாப்பாக அழைத்துவர ஏற்பாடு செய்ய வேண்டும்.

மண்டபம் அகதிமுகாமை மீண்டும் சீரமைத்து அகதிகளை தங்கவைக்கவேண்டும். அவர்களின் குழந்தைகளுக்கு படிக்க வசதியும், மருத்துவ வசதியையும் செய்து கொடுக்கவேண்டும். மத்திய மாநில அரசுகள் வழங்கும் உதவித்தொகை பற்றி அரசியல் கட்சிகளுடன் கலந்து ஆலோசித்து திருத்தி அமைக்கவேண்டும். அகதிகள் அதிகமாக தங்கி உள்ள மண்டபத்தில் நிவாரணப் பணிகளை துரிதப்படுத்த முதல் அமைச்சரிடம் தெரிவிக்க இருக்கிறோம். அது பற்றிய அறிக்கையை மாநில அரசுக்கு அனுப்பிவைத்துள்ளோம். அதே அறிக்கையை மத்திய அரசுக்கும் அனுப்ப இருக்கிறோம் என்றார். (க)

# அரசியல் அமைப்புச் சபையின் சிறுபான்மை கட்சிகளின் பிரதிநிதியாக ரொஹான் எதிரிசிங்க நியமிக்கப்படுவார்?

(கொழும்பு)

அரசியலமைப்புச் சபையில் சிறுபான்மைக் கட்சிகளின் பிரதிநிதியாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டப்பீடபேராசிரியர் ரொஹான் எதிரிசிங்கவை நியமிப்பதற்கு நாடாளுமன்ற சிறுபான்மை அரசியல் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் மலையக மக்கள் முன்னணி ஆகியன ஒன்றிணைந்து இந்தத் தீர்மானத்தை எடுத்திருப்பதனூடாக அரசியலமைப்புச் சபைக்கு உறுப்பினர்களை நியமிப்பது சம்பந்தமாக எழுந்திருந்த நெருக்கடி நிலை தீருமென நம்பப்படுகிறது.

அரசியலமைப்புச் சபையின் வெற்றிடத்திற்கென ரொஹான் எதிரிசிங்கவை நியமிக்குமாறு கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ. சந்திரசேகரன் ஆகியோரின் கையெழுத்துடனான கடிதம் ஜனாதிபதி மஹிந்தவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்த நியமனத்தை நிராகரிக்க வேண்டும் என்று ஜே.வி.பி தொடர்ந்து வலியுறுத்துகிறது.

இது தொடர்பாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் விமல் வீரவன்ஸ கருத்துக் கூறுகையில்,

ரொஹான் எதிரிசிங்கவை நியமிக்கும் முடிவை நாங்கள் எதிர்ப்போம். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் எமது எதிர்ப்பைப்பதிவு செய்வோம். எதிரி சிங்கவை மஹிந்த நியமிக்கமாட்டார் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. ரொஹான் எதிரிசிங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர். அவர்களது நிலைப்பாடு என்ன என்பது அனைவருக் கும் தெரியும்.

விடுதலைப் புலிகளின் நிழல் பிரதிநிதிகளின் வலையில் மஹிந்த விழ மாட்டார். ரொஹான் எதிரிசிங்க மற்றும் ஜெயதேவ உயங்கொட இருவரையுமே அரசியல்யாப்புச்சபையில் இணைக்க தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முன்னர் முயற்சித்தது.

நாடாளுமன்றில் எமக்கு 38 உறுப்பினர்கள் உள்ளனர். இதை ஆளும் கூட்டமைப்பு மறந்துவிடக்கூடாது என்றார்.

இதேவேளை ஜே.வி.பி சார்பில் உபாலி ஜெயசேகர பரிந்து ரைக்கப்பட்டுள்ளார். தமது கட்சிக்கும் மஹிந்தவுக்கும் இடையேயான உறவை முறித்துக்கொள்ளும் வகையில் ரொஹான் எதிரிசிங்கவை மஹிந்த நியமிக்கமாட்டார் என்று ஜே.வி.பி தரப்பினர் நம்பியுள்ளனர்.

இந்த நிலையில் ரொஹான் எதிரிசிங்கவின் நியமனத்திற்கு ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவு தெரிவித்துள்ளது. அக் கட்சியின் பேச்சாளர் ஒருவர் கூறுகையில் , அரசியல் அமைப்புச் சபையை முடக்கும் எதுவித முயற்சிக்கும் மஹிந்த அனுமதிக்கக்கூடாது என்றார். (க)

## தந்தையின் வழியில் தனயன்

பாராளுமன்ற உறுப்பினரின் மகன் பாராளுமன்ற உறுப்பினராகவும், பிரதமரின் மகன் பிரதமராகவும், அமைச் சரின் மகன் அமைச்சராகவும் வருவது அரசியல் வரலாற்றில் சர்வசாதாரணமாக நடக்கும் விடயம். ஆனால் அரசாங் கத்தில் அதுவும் இராணுவத்தில் தந்தை வகித்த அதே பதவியை மகனும் வகிப்பது என்பது இலங்கையின் அரசியலில் அபூர்வ சம்பவமாகும்.

இலங்கையின் 5ஆவது விமானப் படைத்தளபதியாக பதவி வகித்த ஹரி குணதிலக்கவின் மகனான டபிள்யூ.டி.ஆர். எம்.ஜே. றொஹான் குணதிலக்க இலங்கையின் 12ஆவது விமானப்படைத்தளபதியாக பதவி ஏற்றிருப்பது இலங்கை அரசியல் வரலாற்றில் முதல் சம்பவ மாகும்.

தந்தை வகித்த அதே பதவியை மகன் வகிப்பது இலங்கையின் விமானப்படை வரலாற்றில் முதல் தடவையாகும்.

தளபதிப் பதவியை ஏற்றுக்கொண்ட றொஹான் குணதிலக்கவுக்கு நேற்று முன்தினம் காலை இராணுவ அணி வகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. (து)

## புத்திஜீவிகள் குழு நியமனம்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு தொடர்பான வரைவை தயாரிப்பதற்கான குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்காக புத்திஜீவிகள் குழுவினை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

இக் குழுவில் 12 பேர் அங்கம் வகிக்கின்றனர் என ஜனாதிபதி செயலகம் நேற்று முன்தினம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தரணிகள் எச்.எல்.பீ.சில்வா, பைசி முஸ்தாப, ஆர்.கே. டபிள்யூ. குணசேகரா, கோமின் தயாசிறி, டாக்டர் சிவாஜ் பீலிக்ஸ், ரி.ஆர்.பெரேரா, ஜயம்பதி விக்கிரமரட்ண, அசோகா குணவர்த்தன, ஐ.ஜே.விஜயதாச, தர்மசிறி பீரிஸ், மல்காந்தி விக்கிரமசிங்க ஆகியோர் இக் குழுவில் இடம்பெறுகின்றனர். (க-6)

## மருந்தாளர்களுக்கான இறுதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

மருந்தாளர்களுக்கான இறுதிப் பரீட்சை எதிர்வரும் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் யாழ்.பண்ணையில் அமைந்துள்ள சுகாதாரத் திணைக்கள பிராந்திய பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

இப் பரீட்சை இவ்விரு தினங்களிலும் மு.ப 9மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் எனவும் உரிய பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல் கடிதங்கள் வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார அமைச்சால் அனுப்பி வைக்கப்படும் எனவும் வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு மேலும் அறிவித்துள்ளது. (க-7)

## சமுர்த்தியாளர்களும் நாட்டை அபிவிருத்தி செய்ய உதவவேண்டும்

### உள்ளூராட்சி சபைகளுக்கான அமைச்சர்

(கொழும்பு)

நம் நாட்டில் மக்களுக்கு சமுர்த்தி பெற்றுக்கொடுப்பதற்காக பெருந்தொகையான நிதி ஒதுக்கப்படுகிறது.

சமுர்த்தி திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் அதே வேளை நாட்டை அபிவிருத்தி செய்ய அரசு மட்டுமல்ல சமுர்த்தியாளர்களும் தங்களது கூடிய ஒத்துழைப்பை வழங்க வேண்டும் .

இவ்வாறு மாகாண மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கான அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

தம்புள்ள பிரதேச செயலாளர் பிரிவில் நடைபெற்ற சமுர்த்தி கிராம மலர் (கெமி புபுது) என்ற வேலைத் திட்டத்தின் கீழ் பல்வேறு நடவடிக்கைகளை ஆரம்பித்து வைக்கும் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (க-7)




# உதைபந்தாட்ட ஜாம்பவான்களான பிரேசில் போராடி வெற்றி; ரொனால்டோ சோபிக்கவில்லை

(பெர்லின்)

நடப்புச் சம்பியன் பிரேசில் இலகுவாக ஜெயிக்கும் என்று கணித்தவர்களுக்கு நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டம் அதிர்ச்சி தந்திருக்கும். ரொனால்டோ, ரொனால்டினோ, ராபர்ட்டோ கார்லஸ் போன்றவர்கள் இருந்தும் போராடியே வென்றது பிரேசில் அணி. குரோஷியாவை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

ஜேர்மனியில் 18ஆவது உலகக் கோப்பை உதைபந்தாட்ட தொடர் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த எவ் பிரிவு லீக் போட்டியில் 5 முறை சம்பியனான பிரேசில் அணி குரோஷியாவை சந்தித்தது. கிக்-அப் விசில் ஊதிய





முதல் நிமிடத்தில் இருந்தே பிரேசில் வீரர்கள் தாக்குதல் ஆட்டத்தை வெளிப்படுத்தினர். குறிப்பாக ரொனால் டினோ கலக்கலாக ஆடினார். ஆட்டத்தின் 15ஆவது நிமிடத்தில் 35 மீற்றர் தூரத்தி லிருந்து ராபர்டோ கார்லஸ் அடித்த உதை கோல் கீப்பர் கையில் பட்டு வெளியே சென்றது. அடுத்த கோர்னர் வாய்ப்பில் ரொனால் டினோ அடிக்கிறார். இம்முறையும் ராபர்டோ கார்லஸ் அடித்தஉதை கோலாகத் தவறியது. பிரேசிலின் நட்சத்திர வீரரான ரொனால்டோ வசம் பந்து செல்லாமல் குரோஷிய வீரர்கள் பார்த்துக்கொண்டனர். இதனால் ரொனால்டோ சாகசத்தை முதல் பாதியில் காண இயலவில்லை. ஆட்டத்தின் 32 ஆவது நிமிடத்தில் காக்காவை குரோஷியோவின் நிக்கோகோவச் முரட்டுத்தனமாகத் தடுக்க மஞ்சள் அட்டை பெற்றார். இதற்காக பிரேசிலுக்கு பெனால்டி ஏரியாவுக்கு மிக அருகில் வைத்து மேலதிக உதை (பிறி - கிக்) வாய்ப்பு தரப்பட்டது. இதை பிறிகிக் ஸ்பெஷலிஸ்ட் ரொனால்டினோ அடிக்கரசிகர்கள் மத்தியில் டென்ஷன் எகிறியது. ஆனால் பந்தை குரோஷிய தற்காப்புப் பகுதியினர் துடிப்பாக தடுத்து விட வாய்ப்பு நழுவியது.

14ஆவது நிமிடத்தில் அணித்தலைவர் கபுவிடமிருந்து பந்தை பற்ற காக்கா 25 மீற்றர் தூரத்தில் இருந்து அழகான கோல் அடிக்க பிரேசில் முதல் பாதி முடிவில் 1-0 என்ற முன்னிலை பெற்றது.

ரொனால்டோ எங்கே? இரண்டாவது பாதியில் குரோஷிய வீரர்கள் கோல் அடிக்க துடித்தனர். ஆனால் பினிசிங் இல்லாததால் வாய்ப்புக்களை வீணாக்கினர். கோல் மழை பொழியும் என எதிர்பார்த்த பிரேசிலின் ஆட்டம் போகப்போக மந்தமானது. அதிலும் ரொனால்டோவின் நிலைமை ரொம்பப் பரிதாபம். முதல் பாதியில் சோபிக்காத இவர் இரண்டாவது பாதியிலும் ஏமாற்றினார். இதையடுத்து 69ஆவது நிமிடத்தில் இவருக்குப் பதிலாக இளம் ராபின்ஹோ களமிறக்கப்பட்டார்.

இறுதியில் பிரேசில் அணி குரோஷியாவை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி 3புள்ளிகளை முழுமையாகப் பெற்றது.

# தவறிற்கு நடுவர் மன்னிப்பு

உலகக் கோப்பை உதைபந்தாட்டப் போட்டியில் அவுஸ்திரேலியா-ஜப்பான் அணிகள் மோதிய ஆட்டத்தில் நடுவர் தான் அளித்த தவறான முடிவுக்கு அவுஸ்ரேலிய அணியினரிடம் மன்னிப்பு கேட்டுள்ளார்.

இதனை அவுஸ்ரேலிய கோல் கீப்பர் மார்க் தெரிவித்துள்ளார். 26ஆவது நிமிடத்தில் அவுஸ்திரேலிய வீரருக்கு எதிராக பவுள் கொடுத்தது தவறு என்று சுட்டிக்காட்டிய போது நடுவர் இசாம் அப்துல் (எகிப்து) தவறான முடிவு கொடுத்துவிட்டேன் என்று வருத்தம் தெரிவித்துள்ளார். நடுவரின் தவறான முடிவு காரணமாக ஜப்பான் முதல் கோலை அடித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஒரு போட்டியில் ஒருவீரர் 2 கோல்

இந்த உலக கோப்பை போட்டியில் ஒரே வீரர் ஒரு போட்டியில் இரண்டு கோல் அடிக்கும் சம்பவம் அடுத்தடுத்து அசத்தலாக அரங்கேறி வருகிறது.

முதல் நான்கு நாட்கள் ஆட்டத்தில் 5வீரர்கள் தலா 2 கோல்கள் அடித்துள்ளனர். ஜேர்மனி வீரர் குளோஸ், கோஸ்டா ரிகா வீரர் பவ்லோ வான்சோபே, மெக் சிக்கோ வீரர் ஓமர் பிராவோ, அவுஸ்திரேலிய வீரர் டிம்காகில் ஆகியோர் தங்கள் முதல் ஆட்டங்களில் இரண்டு கோல்கள் அடித்த பெருமைக்குரியவர்கள்.

# சுவிற்சர்லாந்து தந்திரம் பிரான்ஸை மடக்கியது



மிகவும் எதிர்பார்க்கப்பட்ட பிரான்ஸ் அணி ஆரம்பப் போட்டியிலேயே ஏமாற்றி விட்டது. ஜிடேன், தியரி ஹென்றி வியர்ரா போன்ற நட்சத்திரங்கள் இருந்தும் ஒரு கோல் கூட அடிக்கமுடியவில்லை. அபாரமாக ஆடிய சுவிற்சர்லாந்து போட்டியை சமநிலை 0-0 செய்து பிரான்ஸிற்கு அடி கொடுத்தது. ஜேர்மனியில் 18ஆவது உலக உதைபந்தாட்ட தொடரில் நேற்று முன்தினம் ஜி பிரிவு லீக் போட்டியில் சம்பியன் அணி பிரான்ஸ் சுவிற்சர்லாந்தை சந்தித்தது.

ஆட்டத்தின் 38ஆவது நிமிடத்தில் பிரான்ஸின் ஹென்றி மின்னல் வேக சொட் அடித்தார். இதை தடுக்க முற்பட்டபோது சுவிற்சர்லாந்தின் தற்காப்பு பகுதி வீரர் முல்லரின் கையில் பந்து பட்டது. உடனே பிரான்ஸ் வீரர்கள் பெனால்டி கேட்டனர். ஆனால் ரஷ்ய நடுவர் வாலண்ட்டின் இவானோவ் நிராகரிக்க பிரான்ஸிற்கு அரிய வாய்ப்பு பறிபோனது. அடுத்த 39ஆவது நிமிடத்தில் பிரான்ஸிற்கு இன்னொரு அருமையான வாய்ப்பு கிடைத்தது. ஜிடேன் கொடுத்த பந்தை பெற்ற தியரி ஹென்றி அதை தானே அடிக்க முற்பட்டு வாய்ப்பை கோட்டை விட்டார். மாறாக இவர் வியர்ராவுக்கு பாஸ் செய்திருந்தால் ஒருவேளை கோல் அடித்திருக்கலாம்.

சுவிற்சர்லாந்து அணியைப் பொறுத்த வரை ஜினேடை குறிவைத்து விளையாடியது. இவரது ஒவ்வொரு அசைவுக்கும் ஏற்ப விளையாடி பிரான்ஸ் வாய்ப்புக்களை தகர்த்தது. முதல் பாதி முடிவில் இரு அணிகளும் கோல் அடிக்க இயலவில்லை. இரண்டாவது பாதியில் பிரான்ஸ் அணி கோல் அடிக்க கடுமையாகப் போராடியது. 73ஆவது நிமிடத்தில் மேலதிக உதை (பிரி-கிக்) கிடைத்தது. நடுவர் விசில் ஊதுவதற்கு முன்பாக ஜிடேன் அடிக்க முற்பட்டார். இந்த தவறுக்காக அவர் மஞ்சள் அட்டை பெற்றார். ரஷ்ய நடுவர் வாலன்டின் இவானோவ் சிறிய தவறு செய்தாலும் மஞ்சள் அட்டை காட்டி பரபரப்பு ஏற்படுத்தினார். இறுதியில் ஆட்டம் கோல் எதுவும் அடிக்கப்படாமல் மந்தமான சமநிலையில் முடிந்தது. இரு அணிகளும் தலா ஒரு புள்ளி பெற்றன. கடந்த 2002இல் பிரான்ஸ் அணி முதல் போட்டியில் செனக லிடம் தோற்றது.

இம்முறை ஒரு வழியாக சமநிலை செய்து ஆறுதல் தேடிக் கொண்டது. பிரான்ஸ் அணியில் நேற்று முன்தினம் இந்திய வம்சாவளி வீரரான விகாஸ் தொரா சூவுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. கடைசி நிமிடத்தில் இவர் அடித்த பந்து கோல் போஸ்டில் இருந்து நூலிழையில் விலகிச் சென்றது.

# அறிமுக அணி டோகாவை ஆசிய அணி தென்கொரிய வெற்றி

(பிரான்பட்)

உலககோப்பை தொடரில் தென்கொரிய அணி டோகாவை 2-1 என்ற கோல் கணக் கில் வீழ்த்தியது. இது அந்நிய மண்ணில் தென் கொரியா பெறும் முதலாவது வெற்றியாக அமைந்தது.

கடைசி வரை போராடிய அறிமுக டோகாவின் ஆட்டம் பிரமிக்க வைத்தது. ஜேர்மனி யில் 18ஆவது உலகக் கோப்பை கால்பந்து தொடர் நடக்கிறது. நேற்று நடந்து ஜி பிரிவு லீக் போட்டியில் ஆசியாவின் தென்கொரிய கறுப்புக் கண்டத்தின் அறிமுக டோகா மோதின. 3ஆவது நிமிடத்தில் பிறி கிக் வாய்ப்பை தென்கொரியா வீணாக்கியது. இதற்குப் பிறகு டோகா வீரர்கள் துடிப்பாக ஆடினர்.

31ஆவது நிமிடத்தில் இந்த அணியின் முகமது காதர் 14மீற்றர் தூரத்தில் இருந்து அடித்தசொட் அருமையான கோலாக மாறியது. முதல் கோல் அடித்த உற்சாகத்தில் டோகா வீரர்கள் உற்சாக ஆட்டம் போட்டனர்.





கடந்தமுறை அரையிறுதிவரை முன்னேறிய தென்கொரியாகடும் சவாலை சந்திக்க வேண்டியிருந்தது. முதல் பாதி முடியும் வரை டோகாவின் முன்னிலை 1-0 அப்படியே நீடித்தது. இரண்டாவது பாதியில் தென்கொரிய வீரர்கள் அசத்தலாக ஆடினர். 53ஆவது நிமிடத்தில் டோகா அணித்தலைவர் ஜீன் பால் அபாலா., கொரியாவின் பார்க் ஜியை முரட்டுத்தனமாக கீழே தள்ளிவிட்டார்.

இதையடுத்து இரண்டாம் முறையாக மஞ்சள் அட்டை பெற்ற இவர் வெளியேற்றப்பட்டார். 10பேராக குறைந்த டோகா அணிக்கு இன்னொரு சோதனை. அணித்தலைவர் செய்த தவறுக்காக தென்கொரிய அணிக்கு பிறி கிக் வாய்ப்பு வழங்கப்பட்டது. இதைப் பயன்படுத்தி லீ சுன்- அற்புத கோல் அடிக்க ஆட்டம் சம நிலைக்கு வந்தது.

அமிர்தன்

அடுத்த 72 ஆவது நிமிடத்தில் தென் கொரியாவின் ஆன்ஜங் - ஹவான் 25 மீற்றர் தூரத்தில் இருந்து அடித்த சொட் சூப்பர் கோலாக மாற அணியின் வெற்றி உறுதியானது. அணித்தலைவர் வெளியேற்றத்தால் மன தளவில் டோகா தளர்ந்துபோனது.

இறுதியில் தென்கொரியா 2-1 என்ற கோல் கணக்கில் வென்று 3புள்ளிகளை முழுமையாகப் பெற்றது.

# விஞ்ஞானத் துளிகள்

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் தரும்

# பிறப்புரிமை பிறழ்வுகள் (Genetric disorders)

திரு. யோகராஜா சிவயோகராஜன்
B.Sc. (Hons)


மனிதர்களில் ஒரே இனத்தவ ரிடையே அவர்களின் தோற்றவமைப்பு இயல்புகள் அடுத்துவரும் சந்ததிகட்கு வழங்கப்படுதல் பாரம்பரியம் எனப்படும். இவை பொதுவாக பரம்பரையான தோற்றவமைப்பு இயல்புகள் எனப்படும். மனிதரில் காணப்படும் இயல்புகள் யாவும் பரம்பரைத் தோற்றவமைப்பு இயல்புகள் அல்ல. உதாரணமாக மனிதனின் விருத்தி செய்யப்பட்ட உடற்கட்டு, உடற்பயிற்சியாளரின் உடலமைப்பு என்பன அடுத்த சந்ததிக்கு கடத்தப்படுவதில்லை.

இப்பரம்பரை இயல்புகளை தாய் - தந்தையிடமிருந்து அடுத்தடுத்த சந்ததிகள் பெறுகின்றன. இவ்வியல்புகள் உடற்கூறாகிய கலங்களில் காணப்படும் கருவிலுள்ள, பரம்பரையலகினால் (Gene) கடத்தபடுகிறது. இப்பரம்பரையலகு டீஒக்சிறைபோ நியூக்கிளியோறைட் (Deovy ribonucleotide) என்னும் சேதனக்கூறின் பல்பகுதியமாகும்.

இப்பல்பகுதியக் கட்டமைப்பு தலைமுறையுரிமை அடையும்போது பெரும்பாலும் மாற்றமடைவதில்லை. இவை மனிதனில் இருமடிய நிலையில், 23 சோடிகளாக திரண்டு நிறமூர்த்தங்கள் ஆகக் காணப்படுகின்றன.

இவற்றுள் மனிதனின் உடற்கலங்களில் புணரி கலத்தைத் தவிர ஏனையவற்றில் 22 சோடி ஒத்த தோற்றவமைப்பு உடைய தன்னிறமூர்த்தங்களும் (Auto somes) ஒரு சோடி அமைப்பில் வேறுபட்ட இலிங்க நிறமூர்த்தங்களும் (XX அல்லது YY) (பெண்களில் இலிங்க நிறமூர்த்த சோடி XX ஆகவும் ஆணில் இலிங்க நிறமூர்த்த சோடி YX ஆகவும்) காணப்படுகின்றது.

விருத்தியின் போது இலிங்க நிறமூர்த்தம் சுயாதீனமாக தனிமைப்படுத்தப்பட்டு புணரிகளை (முட்டை/ விந்து) அடைகிறது. இதனால் முட்டை 22 தன்னிறமூர்த்தங்களையும், ஒரு இலிங்க நிறமூர்த்தம் X ஐயும், விந்து 22 தன்னிற மூர்த்தங்களையும் ஒரு இலிங்க நிறமூர்த்தம் X அல்லது Y ஐயும் கொண்டது.




படம்:- மனிதனில் புணரியாக்கமும் மகட்சந்ததி உருவாதலும்


இவ்வொழுங்கமைப்பில் அதாவது புணரிகளின் சேர்க்கையின் போது ஏற்படும் நிறமூர்த்த எண்ணிக்கைகளின் மாற்றம், இலிங்கநிறமூர்த்தங்களின் சேர்க்கையின் மாற்றம், பரம்பரையலகின் கட்டமைப்பு மாற்றம் விகாரம் (Mutertion) என்றழைக்கப்படும். இவ்விகாரத்தினால் அங்கியின் தோற்றவமைப்பு / இயல்புகள் மாற்றமடைகின்றன. இவை பிறப்புரிமையியல் பிறழ்வுகள் எனப்படும் (Genetric disorders).

இப்பிறழ்வுகள் இரத்தத் தொடர்புள்ள பெற்றோர் உறவினர்களிடையேயான பிந்திய வயதுத் திருமணத்தினால் இயற்கையில் நடைபெறலாம். ஆனாலும் எழுந்தமானமாக சில மனித சுற்றுப்புற சூழலுக்குரிய பௌதீக, இரசாயனக் காரணிகளும் விகாரத்தைத் தூண்டுகின்றன. இவை யாவும் விகாரப்பிறப்பாக்கிகள் (Mutagenic agent) எனப்படும். உதாரணமாக கதிர் வீச்சு, ($\alpha$, $\beta$, X, $\gamma$, IIV கதிர்கள்), கடுகுவாயு, நைத்திரஸ் அமிலம், Ethylmethane Sulphonate (ESM), Sodium azide, Methymethane-Sulphonate(MMS) Hydroxylamine (Ha) என்பவற்றைக் கருதலாம்.

### விகாரத்தின் விளைவுகள்

விகாரம் உடலின் எந்தக் கலத்தின் கருவிலும் ஏற்படுத்தப்படலாம். உடற்கலங்களில் ஏற்படும் விகாரம் பெரும்பாலும் தோற்றவமைப்பு இயல்புகளில் வெளிப்படுத்தப்படுவதில்லை. அத்துடன் அடுத்த சந்ததிக்கு தலைமுறையுரிமையாகக் கடத்தப்படுவதில்லை. ஒடுக்கற்பிரிவினால் உருவாகும் இனப்பெருக்க சனனிக் கலங்களாகிய விந்துக்கலம் (ஆண்), முட்டைக்கலம் (பெண்) மற்றும் கருக்கட்டலின் பின் நுகத்தில் (பெண்) ஏற்படும் விகாரமானது அடுத்த சந்ததிக்குக் கடத்தப்படுவதுடன் வெளிப்படுத்தப்படுகின்றது.

இத்தகைய அசாதாரணமான தோற்றவமைப்பு நிலைமையானது சகசம் (Syn droms) எனப்படும்.




படம்:-01

மனிதப் புணரிகளில் ஏற்படும் அசாதாரண நிலை

பெரும்பாலான சகசங்கள் 23 சோடி நிறமூர்த்தங்களின் (Chromosomes) எண்ணிக்கை அதிகரிப்பதால் அல்லது இழக்கப்படுவதால் உருவாக்கப்படுகிறது.

இத்தகைய எண்ணிக்கை மாற்றம் தன்னிற மூர்த்தத்தின் (Autosomes) அல்லது இலிங்க நிறமூர்த்தத்தின் (Sex chromosome) அளவில் விளைவிக்கப்படுகிறது.

சில வகையான சகசங்கள் பொதுவாக எழுந்தமானமாகவும், சுற்றாடல் சூழல் காரணிகளாலும் பழக்கவழக்கங்களினாலும் தோற்றுவிக்கப்படுகின்றன.

உ+ம்:-

| சகசம் | பால் | நிறமூர்த்தம் | நிகழ்தகவு | |
|---|---|---|---|---|
| | | | *Abortuses* | *Births* |
| Down | M or F | Trisomy 21 | 1/40 | 1/700 |
| Patau | M or F | Trisomy 13 | 1/33 | 1/15,000 |
| Edward | M or F | Trisomy 18 | 1/200 | 1/5,000 |
| Turner | F | XO | 1/18 | 1/5,000 |
| Metafemale | F | XXX (or XXXX) | 0 | 1/700 |
| Klinefelter | M | XXY (or XXXY) | 0 | 1/2,000 |
| XYY | M | XYY | ? | 1/2,000 |

M- ஆண் F- பெண்

அட்டவணை:-01

பொதுவாக மனிதனில் காணப்படும் சகசங்கள்

(தொடரும்...)

## சட்டவிரோதமான முறையில்

# இத்தாலியில் தங்கியிருக்கும் 8000 இலங்கையர்களுக்கு நிரந்தர விசா

இலங்கை மக்கள் சட்டபூர்வமாக இத்தாலிக்கு செல்லும் திட்டமொன்று அடுத்த ஆண்டு அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதுதொடர்பாக இத்தாலிய அரசாங்கத்துடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளதாக தொழில் அமைச்சர் அதாவுட செனிவிரத்தின தெரிவித்துள்ளார்.

சுமார் 5 ஆயிரம் இலங்கையர்களுக்கு இதன்மூலம் வேலைவாய்ப்பு கிடைக்கும் என தான் எதிர்பார்ப்பதாகவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். இதேவேளை, சட்டவிரோதமான முறையில் இத்தாலி செல்ல முயற்சிப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இத்தாலியில் சட்டவிரோதமாக குடியேறியிருக்கும் இலங்கையர்களில் 3 ஆயிரம் பேருக்கு இத்தாலிய அரசு இந்த வருடம் நிரந்தர விசாக்களை வழங்கியுள்ளது.

மேலும் 5ஆயிரம் இலங்கையர்களுக்கு நிரந்தர விசாக்களை வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (க)

## க.கா.குழுவின் புதிய பேச்சாளர் நியமனம்

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய பேச்சாளராக தோபினர் ஓமர்ஷன் நியமிக்கப்பட்டுள்ளதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அறிவித்துள்ளது.

ஐஸ்லாந்தைச் சேர்ந்த தோபினர் ஓமர்ஷன் புதிய பேச்சாளராக நேற்று முதல் தனது பொறுப்புகளை கையேற்றார் என போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அறிவித்துள்ளது. (க)



ஜப்பான் ஜெய்க்கா நிறுவனம் யாழ். போதனா வைத்தியசாலையில் இரத்த வங்கிக்காக புதிய கட்டடமொன்றை ஆறுமாத காலத்துக்குள் பூர்த்திசெய்து ஒப்படைப்பது என்ற ஒப்புதலுடன் அதனுடைய 18 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி ஆரம்பித்த கட்டட வேலை ஆறுமாதங்கள் கடந்த நிலையில் ஆரம்ப கட்ட வேலையுடன் ஸ்தம்பித்து நிற்கும் பரிதாப நிலையைப் படத்தில் காணலாம்.

*(படம்: திலீவின்பன்)*

சுன்னாகம் மயிலணி சிவன்கோவில்



மஹா கும்பாபிஷேகம்



15.06.2006 வியாழன்
(15ஆம் நாள்)

வினை தீர்த்தருள்வாய்!

பசுபதி யாகினாய் பாற்கடல் மேவினாய்
கசுமால ரகத்தினைக் கச்சுரு நீற்றினாய்
உசும்பிடு மகிலத்தை யுள்நின் றாக்கினாய்
விசுவ நாதனே! வினைதீர்த் தருளுவாய்!

இயல்வாணன்

# யாழ்.மத்திய பஸ் நிலையத்தை புனரமைக்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தின் புனரமைப்புப் பணிகள் வெகு விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளதாக ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் யாழ்-கிளிநொச்சி மாவட்டங்களுக்கான புனரமைப்புப் பணிகளை யாழ்.மாவட்டத்தில் விரிவாக மேற்கொள்வது பற்றி நேற்று முன்தினம் வலிகாமம் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட சண்டிலிப்பாய், சங்கானை, கோப்பாய், தெல்லிப்பளை, சுன்னாகம் ஆகிய பகுதிகளின் கிராமசேவை





அபிவிருத்திக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் யாழ்.அலுவலகத்தில் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் முகமாக இடம்பெற்ற சந்திப்பின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் பயணிகளின் வசதி கருதி புனரமைப் புப் பணிகள் வெகு விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும், பயணிகள் முகம் கொடுத்துவரும் இடையூறுகளை நீக்கும் வகையில் மலசலகூட வசதிகள் உட்பட அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்படும் என்றும் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இது போன்ற பல்வேறு அபிவிருத்தி மற்றும் புனரமைப்புப் பணிகள் யாழ்.மாவட்டத்தில் பரந்தளவில் மேற்கொள்ளப்படவுள்ளதையும் விபரித்துக் கூறினார்.

இவ்வாறான அபிவிருத்தி மற்றும் அதிகாரிகளுடனான சந்திப்பொன்றும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதே நேரம் நேற்று முன்தினம் இடம் பெற்ற மக்கள் குறைதீர்க்கும் சந்திப்பின் போது ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் அமைச்சரைச் சந்தித்து தங்களது பிரச்சினைகளை முன்வைத்து அவற்றுக்கான தீர்வுகளையும் கண்டனர்.

இம் மக்களின் பெரும்பாலான பிரச்சினைகள் ஒழுங்கான உட்கட்டமைப்பு வசதிகளின்மை காரணமாக ஏற்படுகின்றன என் பதை இனங்கண்டுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கட்டம் கட்டமாக யாழ். மாவட்டம் முழுவதற்கும் சிறந்த முறையிலான உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை தான் தற்போது மேற்கொண்டு வருவதாகவும் இவற்றுள் பெரும் பாலான திட்டங்கள் இவ்வருட இறுதிக்குள் பூர்த்தி செய்யப்படும் என்றும் தெரிவித்தார். (க)







நேற்று முதல் ஒருவார காலத்துக்கு யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து கொண்டாடும் குருதிக் கொடையாளர் தின நிகழ்வில் இரத்த தானம் செய்யும் குருதிக் கொடையாளர்களில் சிலரைப் படங்களில் காணலாம். (படங்கள்:-திலீவின்பன்)

### போர்நிறுத்த உடன்படிக்கையை காரணம்காட்டி

# பிரபாகரனை கைதுசெய்யாதிருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது-ஹெல உறுமய

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை கைது செய்வது குறித்து போர்நிறுத்த உடன்பாட்டை காரணம் காட்டி விலகிச் செல்வது ஏற்றுக் கொள்ள முடியாது என ஜாதிக ஹெல உறுமயவின் செயற்பாட்டாளர் கொட்டக தெனிய தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மேல்முறையீட்டு நீதிமன்றில் சாட்சியமாகிய போதே இதனைத் தெரிவித்துள்ளார். மத்திய வங்கிக் குண்டு வெடிப்புடன் தொடர்புடைய வழக்கில் உயர் நீதிமன்றம் தமிழ்த் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனிற்கு 2002ஆம் ஆண்டில் 200 வருட சிறைத் தண்டனையே விதித் தது.

எனவே இத் தண்டனையை வழங்குவதற்காக அவரை கைதுசெய்ய வேண்டுமென பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட வேண்டுமென்று தெரிவித்து கொட்டகதெனிய மேல் முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்தார். எனினும் போர்நிறுத்த உடன்படிக்கைக்கு அமைவாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிக்குச் சென்று பிரபாகரனை கைதுசெய்ய முடியாது என பொலிஸ்மா அதிபர் மேல்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அறிவித்திருந்தார்.

இதனை ஏற்றுக்கொள்ளாத மனுதாரர் கொட்டகதெனிய இலங்கை பொலிஸாருக்கு பொலிஸ் சட்டத்திற்கு அமைவாக இலங்கையில் எப்பகுதிக்கும் சென்று விசாரணைகள் செய்வதற்கு அதிகாரமுண்டு என சுட்டிக் காட்டியுள்ளார். (ச-5)

# சுகாதாரத் தொண்டர்கள் நியமனத்தில் அநீதி இழைப்பு

### அரசாங்க பொதுச்சேவைகள் சங்கம் வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநருக்கு கடிதம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள வைத்தியசாலையில் கடந்த இரண்டு தசாப்த காலமாக பல்வேறுபட்ட இடர்பாடுகளுக்கு மத்தியில் சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றிய பலருக்கு நிரந்தர நியமனம் வழங்கும் போது அநீதி இழைக்கப்பட்டுள்ளமை மன்னிக்க முடியாத மாபெரும் குற்றமாகும்.

இவ்வாறு அகில இலங்கை அரசாங்க பொதுச் சேவைகள் சங்கம் வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளது. அகில இலங்கை அரசாங்க பொதுச் சேவைகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் கே.நடராசா இவ் விடயம் தொடர்பாக அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

யுத்தம் மற்றும் சுனாமி என்பவற்றால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த சுகாதாரத் தொண்டர்கள் பலர் இந்நியமனம் வழங்கும் விடயத்தில் முற்றாக புறக்கணிக்கப்பட்டுள்ளமை கவலை தரும் விடயமாகும்.

கடந்த காலங்களில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பணியாற்றிய சுகாதாரத் தொண்டர்களுக்கு மூன்று தடவைகளுக்கு மேல் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்கள் பகிரங்கமாக விளம்பரப் பலகையில் இடப்பட்டது. இதன் பின்னர் நியமனம் வழங்கும்போது விளம்பரப் பலகையில் இடப்பட்ட பலரின் பெயர்கள் மாயமாய் மறைந்தமையும் அரசியல் செல்வாக்கு அதிகாரிகளின் சிபார்சு உடையவர்களின் பெயர் சேர்க்கப்பட்டமையும் விசனத்திற்குரிய விடயமாகும்.

எனவே உண்மையான சுகாதார தொண்டர்களாக பணியாற்றிய அனைவருக்கும் நிரந்தர நியமனம் வழங்க மாகாண ஆளுநர் என்ற வகையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-7)

# ஒற்றையாட்சிக் கோட்பாட்டை கைவிட்டது இலங்கை அரசு?

இலங்கை அரசாங்கமானது ஒற்றையாட்சிக் கோட்பாட்டைக் கைவிட்டுள்ளதாக கொழும்பு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஐக்கிய இலங்கைக் கோட்பாட்டுக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இலங்கை அரசு முன்வந்துள்ளது என்றும் அந்த ஊடகங்கள் வெளியிட்ட செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையில் ஜனாதிபதித் தேர்தலின் போது ஜே.வி.பி.மற்றும் ஜாதிக ஹெல உறுமயவுடனான ஒப்பந்தத்தில் ஒற்றையாட்சிக் கோட்பாட்டை மஹிந்த ராஜபக்ஷ வலியுறுத்தினார். இலங்கை அரசாங்கத்தின் இந்தப் புதிய கோட்பாட்டை கடந்த வாரம் ஒஸ்லோவில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பிலும் வெளிப்படுத்தினார்.

''பிளவுபடாத ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு'' என்கிற கோட்பாட்டை அவர் வெளிப்படுத்தினார். மேலும் தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுக்களில் ஆர்வமற்று இருக்கின்றனர் என்றும் பேச்சு மேசைகளிலிருந்து விலகிச் செல்வதற்கான காரணங்களையே கூறிவருகின்றனர் என்றும் மங்கள சமரவீர கூறினார்.

மங்கள சமரவீரவின் ஊடகவியலாளர் நேர்காணலை இலங்கை வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஹிமாலி அருணதிலக்க உறுதிப்படுத்தியுள்ளார். அரசாங்கத்தின் ஒரு பகுதிதான் வெளிவிவகார அமைச்சர். அவர் வெளியிடும் அறிக்கைகள் அரசாங்கத்தின் நிலைப்பாடு தான் என்றார் அவர். (க)

## பரீட்சையில் மோசடி; விசாரணைகள் விரைவில்

க.பொ.த.உயர்தரப் பரீட்சையின் போது மோசடியில் ஈடுபட்ட மாணவர்கள் தொடர்பான விசாரணைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

சில மாணவர்கள் வினாத் தாள்களை வீட்டில் எடுத்துச் சென்றுவிட்டு மீண்டும் திரும்பி வந்து பரீட்சை மண்டப அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளமை தொடர்பான முறைப்பாடுகள் தமக்குக் கிடைத்துள்ளதாகவும் பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். ஆள்மாறாட்டம் குறித்த முறைப்பாடுகளும் கிடைத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

## ஆன்மீக சொற்பொழிவு

புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணி பூசை முடிவுற்றதும் ''ஏன் பிறந்தோம்'' என்னும் விடயம் பற்றி பலாலி ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவன் சிவஞானம் பாலமுரளி ஆன்மீக சொற்பொழிவாற்றுவார்.

அதனைத் தொடர்ந்து அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். (க-35)

# இராணுவ சோதனைக்குள்ளான த.தே.கூட்டமைப்பு எம்.பி

(யாழ்ப்பாணம்)

சோதனை என்ற பெயரில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் கடந்த திங்கட்கிழமை திருநெல் வேலி சந்தியில் இராணுவத்தினரால் சுமார் 45 நிமிடங்கள் மறித்து வைக்கப்பட்டுள்ளார்.

வன்னியில் இருந்து யாழ்.நகர் நோக்கி வந்துகொண்டிருந்த அவரது வாகனத்தை திருநெல்வெலிச் சந்தியில் மறித்த இராணுவத்தினர் அவரையும் அவரது மனைவியையும் வாகனம் செலுத்தியவரையும் கீழிறக்கி உடற் பரிசோதனைக்குள்ளாக்கியதையடுத்து சுமார் 45 நிமிடநேரம் வாக்குவாதப்பட்டிருக்கிறார்கள்.

அல்லைப்பிட்டி சம்பவத்தில் உயிரிழந்த குடும்பத்தினரின் சுவரொட்டிகளை அவர் தம்வசம் வைத்திருந்ததே இந்த அசம்பாவிதத்துக்குக் காரணமெனத் தெரிகிறது. 45 நிமிடத்துக்குப் பிறகு அங்குவந்த திருநெல்வேலி இராணுவப் பிரிவுப் பொறுப்பதிகாரி ஒருவர் உங்களை சோதிக்க நீங்கள் மறுத்ததாலேதான் இப்பிரச்சினை ஏற்பட்டது. இனி நீங்கள் போய்வரலாமெனக் கூறியதாகவும், இப்பிரச்சினையை அடுத்து பாராளுமன்ற அமர்வில் எடுத்துரைப்பேன் என ஈழவேந்தன் அவரிடம் கூறியதாகவும் தெரிகிறது. (து)

## சதாம் வழக்கில்

# சாட்சிகளின் விசாரணை முடிந்தது நீதிபதி திடீரென அறிவிப்பு!

(பக்தாத்)

ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் உசேனுக்கு எதிரான வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பு சாட்சிகளின் விசாரணை முடிந்துவிட்டதாக நீதிபதி நேற்று முன்தினம் அறிவித்தார். இதற்கு சதாமிற்குஆதரவாக ஆஜராகும் வக்கீல்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.



ஈராக் அதிபராக இருந்தவர் சதாம் உசேன். அமெரிக்கப் படையெடுப்பால் ஆட்சியை பறிகொடுத்தார். சதாம் உள்ளிட்ட எட்டுபேர்மீது ஜெயில் படுகொலைகள் தொடர்பான வழக்கு விசாரணை பக்தாத் சிறப்பு நீதிமன்றில் நடந்துவருகிறது. விசாரணை நேற்று முன்தினம் தொடர்ந்தது.

அப்போது குற்றம் சாட்டப்பட்டவரின் சார்பில் சாட்சிகளை விசாரிக்க இன்றே கடைசி நாள் என நீதிபதி அப்துல் ரகுமான் கோர்ட்டில் திடீரென தெரிவித்தார்.


இந்த உத்தரவுக்கு எதிர்ப்பு தெரிவித்து சதாமின் ஆதரவு வக்கீல் நீதி பதியுடன் கடும் வாக்கு வாதத்தில் ஈடுபட்டார்.

இதுகுறித்து சதாம் சார்பில் ஆஜரான கார்டிஸ் டோப்ளர் கூறும்போது இந்த வழக்கு தொடர்பாக தேவை யான ஆவணங்களை தயார்படுத்த எங் களுக்கு போதுமான அவகாசம் அளிக்கப் படவில்லை. சாட்சிகளை சதாமுக்கு எதி ராக சாட்சியம் அளிக்கும்படி கட்டாயப்படுத் தினர். நான்கு சாட்சிகள் தாக்கப்பட் டும், கைதுசெய்யப்பட்டும் உள்ளனர்.

சாட்சிகள் கூறும் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்க எங்கள் கட்சி காரருக்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை. எனவே எங்களுக்கு கூடுதல் அவகாசம் தரவேண்டும் விசாரணையை முடிக்கக்கூடாது என்றார்.

சதாமுக்கு எதிராக சாட்சியம் அளித்த முக்கிய சாட்சிகள் திடீரென பல்டி அடித்ததால் அவர்கள் இரண்டு வாரங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டனர். இதற்குபதிலளித்த நீதிபதி அப்துல் ரகுமான் சதாம் வக்கீலின் முடிவில்லாத இந்த பேச்சை நான் கேட்கவிரும்பவில்லை. சாட்சிகளை விசாரிப்பதா அல்லது நீங்கள் உங்கள் கட்சி காரருக்கு ஆதரவாக வாதம் செய்கிறீர்களா? என்பதை நீங்கள் தேர்வுசெய்ய வேண்டும் என்றார்.

சதாமின் சிற்றன்னையின் மகன் இப்ராகிம் இனி கோர்ட்டுக்கு வரக்கூடாது என்றும் நீதிபதி தனது உத்தரவில் கூறினார். (கு)



ரஷ்ய நகரான செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் நெவா நதியில் அமைக்கப்பட்டிருந்த செயற்கை நீரூற்று பொதுமக்கள் பார்வைக்காக திறந்து வைக்கப்பட்டது

# மு.க.ஸ்டாலினை கொல்ல முயற்சி

மதுரை ரயில் நிலையத்தில் அமைச்சர் மு.க.ஸ்டாலினை கொல்ல முயற்சி நடந்தது. கத்தியால் குத்த முயன்ற மர்ம மனிதன் தப்பிஓடி விட்டான். தடுத்த பாதுகாப்பு அதிகாரி காயம் அடைந்தார்.

மதுரை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து ஆய்வு செய்வதற்காக அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று முன்தினம் மதுரை வந்தார். சென்னையில் இருந்து ரயில் மூலம் புறப்பட்டு அவர் மதுரை வந்து சேர்ந்தார்.

தமிழக உள்ளாட்சித்துறை அமைச்சராக பொறுப்பேற்ற பிறகு ஆய்வுக்காக முதல் முறையாக மதுரை வந்ததால் அவரை வரவேற்பதற்காக ரயில் நிலையத்தில் அமைச்சர்கள் ஏராளமான தி.மு.க.தொண்டர்கள் மற்றும் அதிகாரிகள் பெரும் கூட்டமாக கூடி நின்றனர். ஸ்டாலின் வருகையை ஒட்டி ரயில் நிலையத்தில் பொலிஸ் உயர் அதிகாரிகள் தலைமையில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது.

ரயில் நேற்று முன்தினம் காலை 6.25 மணிக்கு மதுரை ரயில் நிலையத்தில் உள்ள முதலாவது பிளாட்பாரத்தில் வந்து நின்றது. ஸ்டாலினை வரவேற்பதற்காக சால்வை, மாலையுடன் தி.மு.க.வினர் முண்டியடித்துக்கொண்டு பெரும் திரளாக ரயில் பெட்டியை நோக்கி வேகமாகச் சென்றனர்.

வரவேற்புக்கு பிறகு ஸ்டாலின், ரயில் நிலையத்தில் இருந்து தி.க.நிர்வாகி களுடன் முதலாவது பிளாட் பாரத்தில் நடந்து வந்துகொண்டு இருந்தார். அப்போது அவருக்கு இடது புறம் கூட்டத்தில் இருந்து சுமார் 45 வயது மதிக் கத்தக்க ஒருவன் கையில் கத்தியுடன் திடீரென்று ஸ்டாலின் பின்னால் பாய்ந்தான். அதைப் பார்த்த ஸ்டாலினுடன் நடந்துவந்து கொண்டிருந்த பாதுகாப்பு அதிகாரி சுரேஷ்குமார் பாண்டே (வயது 41) ஓடிச் சென்று அந்த மர்ம மனிதன்னை தடுத்து மடக்கிப்பிடித்தார்.

ஆனால் அந்த மனிதன் அவரது பிடியில் இருந்து திமிறிக்கொண்டு அங்கிருந்து கூட்டத்துக்குள் ஓடி கண் இமைக் கும் நேரத்தில் தப்பிவிட்டான். பாதுகாப்பு அதிகாரி அவனை பிடித்தபோது அவன் கையில் இருந்த கத்திமட்டும் அவரது கையில் சிக்கியது. அந்த மர்ம மனிதன் கத்தியை இழுத்ததில் அவரது கையில் கத்தி கிழித்தது. என்றாலும் அவர் கத்தியை கெட்டியாக பிடித்துக்கொண்டார். இதனால் கத்தியை நழுவ விட்டு விட்டு அந்த மர்ம மனிதன் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டான். இச்சம்பவம் குறித்து தீவிர பொலிஸ் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (கு)

உலக தரிசனம்

# ஈராக்கில் கார் குண்டுத்தாக்குதல் 18 பேர் பலி; 45பேர் படுகாயம்

ஈராக்கில் அல்-குவைதா அமைப்பின் புதிய தலைவராக அபு ஹம்சா அல் முகாஜர் பதவி யேற்ற பின்பு கிர்குக் பகுதியில் பொலிஸாரை குறிவைத்து நேற்று முன்தினம் ஐந்து கார் வெடிகுண்டு தாக்குதல்கள் நடந்தன. இதில் 18 பேர் பலியாயினர்.

அல்-குவைதா அமைப்பின் ஈராக் தலைவராக இருந்த அல் ஜர்காவி அமெரிக்க கூட்டுப்படையினர் நடத்திய வான் வெளித் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டான். இதையடுத்து, நாடு முழுவதும் வன்முறைச் சம்பவங்களை தீவிரவாதிகள் தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், கடந்த திங்கட்கிழமை அல்-குவைதா தீவிரவாதிகளின் கவுன்சில் கூடி அபு ஹம்சா அல் முகாஜரை ஈராக்கிற்கான புதிய தலைவராக தேர்வு செய்தது.

முகாஜர் எகிப்து நாட்டைச் சேர்ந்தவன். இவன் பதவியேற்ற பின்பு எண்ணெய் வள நகரமான கிர்குக்கின் வடக்குப் பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸாரை குறிவைத்து ஐந்து கார் வெடிகுண்டு தாக்குதல்கள் நேற்று முன்தினம் நடத் தப்பட்டன. இந்த சம்பவத்தில் 18 பேர் பலியாயினர். மேலும் 45 பேர் படுகாயமடைந்தனர்.

கார் குண்டு தாக்குதல் சம்பவம் குறித்து ஈராக் இராணுவ அதிகாரி ஒருவர் கூறுகையில், ஜர்காவி படுகொலைக்கு பிறகு ஈராக்கில் வன்முறைச் சம்பவங்கள் நடக்கும் என நாங்கள் முன்பே எதிர்பார்த்தோம். எனவே பக்தாத் முழுவதும் பாதுகாப்பு தீவிரப்படுத் தப்பட்டுள்ளது என்றார். (கு)

# 190 மாவோ.தீவிரவாதிகள் நேபாளத்தில் விடுவிப்பு

தீவிரவாதத்திற்கு எதிரான சட்டத்தின் கீழ் சிறையில்அடைக்கப்பட்ட 190மாவோயிஸ்ட் தீவிரவாதிகளை நேபாள அரசு நேற்று முன் தினம் விடுவித்தது.


நேபாளத்தில் மன்னர் ஞானேந்திரா ஆட்சியின் போது, தீவிரவாதத்திற்கு எதிரான பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட மாணவர் தலைவர்கள், தொழிற் சங்க ஆதரவாளர்கள்உட்பட 190மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் நாடு முழுவதும் உள்ள பல்வேறு சிறைகளிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

மாவோயிஸ்ட்டுகளின் தலைவர் பிரசன்னா மற்றும் உள்துறை அமைச்சர் கிருஷ்ணா சதுலாவுக்கு இடையே நடைபெற்ற முதல் கட்ட நேரடிப் பேச்சுவார்த்தை யைத் தொடர்ந்து இந்த மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் விடுவிக்கப்பட்டனர்.

பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ராலா தலைமையில் திங்கட்கிழமை நடந்த அமைச்சரவை கூட்டத்தில் தீவிரவாதிகளுக்கு எதிரான அனைத்து வழக்குகளையும் திரும் பப் பெறுவது என்று முடிவு எடுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து தீவிரவாதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது. (கு)







கொட்டடிச் சந்திக்கருகில் நேற்று நண்பகல் இனம்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்ட பிலிப் மரியநாயகத்தின் (வயது-56) சடலத்தையும், அதனைப் பார்வையிடும் யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரத்தையும் படங்களில் காணலாம். (படங்கள்:-திலீவின்பன்)

பிறர் மெச்சுவதற்காகச் செய்யும் செயல் நம்மை நாம் முட்டாளாக ஆக்கிக் கொள்ளத்தான் உதவும்.

-சுவாமி இராமதாசர்

வலம்புரி

## கணினி பயிற்றும் நிறுவனங்களை கண்காணிப்பது யார்?

யாழ்ப்பாணத்தில் இப்போது மூலைக்கு மூலை கணினி பயிற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் உருவாகியுள்ளன.

தற்போதைய தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் புரையோடலாக யாழ்ப்பாணத்திலும் கணினி அறிவைப் பயிற்றுவிக்கும் தனியார் நிறுவனங்கள் தோற்றம் பெற்றுள்ளன.

எனினும் இவற்றின் வெளியீடு எவ்வாறு உள்ளது என்பதும் இவை அறவீடு செய்கின்ற கட்டணமும் யாழப்பாண மாணவர் சமுதாயத்தை ஏமாற்றுவது போன்ற நிலையை ஏற்படுத்தியுள்ளன.

நிறுவனங்களுக்கு நிறுவனங்கள் கட்டண ஏற்றத் தாழ்வுகளை கொண்டிருக்கும் அதேநேரம் அதிக கட்டணத்தை அறவீடு செய்யும் அளவிற்கு கணினி தொடர்பான பயிற்சியளிப்பு இல்லையென்ற குற்றச்சாட்டு மாணவர்களாலும் பெற்றோர்களாலும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இக் குற்றச்சாட்டுக்களை மறுக்கும் தார்மீகப் பொறுப்பு கணினி அறிவைப் பயிற்றுவிக்கும் தனியார் நிறுவனங்களுக்கு உண்டு.

எனினும் மேற்குறிப்பிட்ட தனியார் நிறுவனங்களில் பயின்ற மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சான்றிதழ்களைப் பார்க்கும்போது அவை உலகப் புகழ் பெற்ற பல்கலைக்கழகங்களால் வழங்கப்பட்ட சான்றிதழ்களிலும் பார்க்க உயர் பெறுமானம் உடையவையாக இருக்கின்றன.

சான்றிதழ்களின் வடிவமைப்பு, அதன் தனித்துவம், அதில் பதிக்கப்பட்டுள்ள இலட்சனை, சான்றிதழ் மூலம் உறுதி செய்யப்பட்ட பட்டம் என்பவற்றைப் பார்க்கும்போது உலகிலேயே யாழ்ப்பாணத்தில்தான் கணினிக் கல்வியறிவு உச்சம் பெற்றுள்ளது போன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்துகின்றது.

ஆனால் அந்தச் சான்றிதலுக்குரியவரின் தகுதியை செயல்முறையில் பரீட்சித்துப் பார்க்கும்போது கணினியை இயக்குவதன் ஆரம்ப கட்ட அறிவைக் கூட உரியவர் பெற்றிராததைக் காண முடிகின்றது.

இந்த உண்மையை முதன்முதலில் கண்டறிந்த பெருமை சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களையே சாரும்.

சான்றிதழ்களின் வடிவமைப்பில் மயங்கி கணினிப் பயிற்சியில் சிறப்புத் தகுதி உடையவர்களாக நினைத்துப் பதவி வழங்கிப் படும்பாடு வேறோர் அனுபவம்.

இதற்குள் இருக்கக் கூடிய ஏமாற்றுக்கள் மாணவர்களின் பணத்தை அறவிட்டுவிட்டு அவர்களுக்கு உரிய பயிற்சியளிக்காமை போன்றவை வெளிநாட்டிற்கு அனுப்பும் ஏஜென்டுகளின் ஏமாற்றத்திற்குள் அடக்கப்படக் கூடியவையே.

அவ்வாறான ஏமாற்றத்தை கண்காணிக்கும் பொறுப்பு யாருடையது என்பதே இப்போதைய கேள்வி.

# நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட அர்ப்பணிப்புடன் செயற்படுவேன்!

## கூட்டுப்படைகளின் புதிய தளபதி டொனால்ட் பெரேரா



(கொழும்பு)

நாட்டில் சமாதானம் ஏற்பட அர்ப் பணிப்புடன் செயற்படப்போவதாக புதிதாக பதவியேற்றுள்ள கூட்டுப்படைகளின் தளபதி ஏயார் மார்சல் டொனால்ட் பெரேரா தெரிவித்தார்.

கொழும்பு 2 இல் அமைந்துள்ள இராணுவத் தலைமையகத்தில் கடந்த திங்கட்கிழமை கூட் டுப்படைத் தளபதி யாக பதவியேற்ற பின்னர் உரையாற்று கையிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

இந்த நாட்டில் நிலவும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படல் வேண்டும் அதற்கு எமது பணி மிக அவசியம் எனவே நிரந்தர சமாதானம் ஏற்படநான் முழுமையான அர்ப் பணிப்புடன் செயற்படுவேன். பதவி விலகிச் செல்லும் வைஸ் அட்மிரல், தயா சந்தகிரி கூட்டுப்படை தளபதியாக செயற்பட்டு அரும் பணியாற்றியவர் அவரின் உழைப்பு நினைவு கூரத்தக்கது.

சமாதானத்தின் தேவையை உணர்ந்து அனைவரும் செயற்படவேண்டும். படையினரின் அர்ப்பணிப்பு சமாதானம் ஏற்பட அவசியமானது. எனது எதிர்காலப் பணி இதனடிப் படை யிலேயே அமையும் என்றார்.

இதேவேளை, விமானப்படைத்தளபதியாக நியமிக்கப் பட்டுள்ள ஏயார் மார்சல் ரொஷான் குணதிலக விமானப்படை தலைமையகத்தில் அன்றையதினம் தமது பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டார். (க)

# பொதுமக்களின் படுகொலைகள் குறித்த விசாரணையில் அரசு பாரபட்சம் காட்டுகிறது

## க.கா. குழுவின் தலைவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**பொதுமக்கள் மீது நடைபெறும் படுகொலைகள் குறித்த அரசாங்கத்தின் விசாரணைகள் பாரபட்சமாக உள்ளன. வடக்கு-கிழக்கில் வசிக்கும் பொதுமக்கள் தங்களதும் குழந்தைகளதும் எதிர்காலம் குறித்து அச்சத்துடன் வாழ்கின்றனர். என போர்நிறுத்த கண்காணிப்புகுழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் இருந்து வெளியாகும் ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

முறையான விசாரணைகளை அரசாங்கம் நடத்தினாலேயே இந்தக் கொடூரமான படுகொலைகளை நிறுத்த முடியும். அரசாங்கம் இந்தப் படுகொலைகள் தொடர்பில் கண்ணை மூடிக்கொண்டு உள்ளது. எந்த ஒரு சம்பவத்திலும் விசாரணைகள் கூடத் தொடங்கப்படவில்லை. அரசாங்கத்தினுடைய பகுதிகளிற்தான் இத்தகைய படுகொலைகள் நடைபெறுகின்றன.

இதற்கான பொறுப்பு பொலிஸாரிடம் உள்ளபோதும் படுகொலைகள் தொடர்பான தரவுகளை கண்காணிப் புக் குழுவுக்கு அவர்கள் தருவதில்லை. ஏராளமான வழக்குகளை நிலுவையில் வைத்துக்கொண்டு தரவுகளை அளிப்பதில் முடக்கத்தை பொலிஸார் ஏற்படுத்தி வருகின்றனர்.

அந்த வழக்குகள் அனைத்தும் விசாரணைக்குள்ளாக் கப்படவேண்டியவை அனைத்து வசதிகளும் மனித வளங்க ளும் உள்ள நிலையில் இதற்கு எதுவித காரணமும் கூறமுடி யாது இந்தப் படுகொலைகள் தொடர்பான சர்வதேச சமூகத்தின் விசாரணைகளுக்கு அரசாங்கம் ஒத்துழைக்கவேண்டும் அப்போது தான் இவற்றுக்குத்தீர்வு காணப்படும் அப்பாவிக் குழந்தைகள் நாளாந்தம் கொல்லப்பட்டுக்கொண்டிருப்பதை சர்வதேச சமூகம் மறுக்கவில்லை.

சில வாரங்களுக்கு முன்பாக வட பகுதியில் நடைபெற்ற படுகொலைகள் தொடர்பாக இலங்கை பொலிஸ்மா அதிபரினது முடிவைக் கண்காணிப்புக்குழு எதிர்பார்க்கிறது இலங்கையின் வடக்கு கிழக்கில் உள்ள யதார்த்த நிலைமைக் குப் புறம்பானவற்றைத்தான் ஊடகங்களுக்கும் சர்வதேச சமூகத்திடமும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்து வருகிறார். அரசாங்கமும் அரச படையினரும் இணைந்து செயற்படவேண்டும்.

அரசாங்கத்தின் ஆணைகளுக்கு அரச படையினர் கீழ்ப் படிந்து செயற்பட வேண்டிய காலம் இது. இலங்கையின் வடக்கு கிழக்கு குறித்து ஊடகங்களுக்கும் சர்வதேச சமூகத் துக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்து வரும் கருத்துக ளுக் கும் களத்திலுள்ள யதார்த்த நிலைமைகளுக்கும் முரண்பாடு உள்ளது என்றார். (க)

# பரராஜசிங்கத்தின் கொலைச் சந்தேக நபர்களை அரசாங்கம் ஏன் இன்னும் கண்டுபிடிக்கவில்லை?

## சர்வதேச நாடுகளின் எம்.பிக்கள் கூட்டமைப்பு கேள்வி

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டு பல மாதங்களான நிலையிலும் கொலையாளிகளை ஏன் கண்டுபிடிக்கவில்லை என்று இலங்கை அரசாங்கத்தை சர்வதேச நாடுகளின் நாடாளு மன்றக் கூட்டமைப்பு கேட்டுள்ளது.

உலகில் உள்ள நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதித்துவத்தை கொண்டு ஜெனீவாவில் இயங்கும் சர்வதேச நாடுகளின் நாடாளுமன்றக் கூட்டமைப்பு பரராஜசிங்கத்தின் படுகொலையை தமது 178ஆவது கூட்டத் தொடரில் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இக் கண்டனத் தீர்மானம் பற்றிய அறிக்கையை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு சர்வதேச நாடுகளின் நாடாளுமன்ற கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் உடனே அனுப்பி வைத்துள்ளார்.

இப் படுகொலை தொடர்பான விடயங்களை உடனடியாக கவனத்தில் எடுத்து விசாரணையை மேற்கொள்ளுமாறு அந்த அறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கண்டன அறிக்கையில் மேலும் கூறப்படுள்ளதாவது,

நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலையானது அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் பாதுகாப்புப் படையினர் புடைசூழ இருந்தபோது 300 பேர் முன்னிலையில் நிகழ்ந்துள்ளது.

இச் சூழ்நிலையில் படுகொலையை நடத்திய கொலையாளி எதுவித த்டையும் இன்றி தப்பி சென்றுள்ளது எமக்கு மிக அதிர்ச்சியைத் தருகிறது.

மேலும் படுகொலை நடந்து பல மாதங்களாகியும் பரராஜசிங்கத்தின் படுகொலையை ஒழுங்கான முறையில் விசாரித்து கொலையாளிகளைக் கண்டு பிடிக்காதது இலங்கையில் அரசு மன்னிப்புடன் கொலைகள் நடைபெறுகின்றது என்ற நீண்ட நாள் குற்றச்சாட்டை தெளிவாக்குவது போல் உள்ளது என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (க)

# திடீர் சோதனைகளுக்கு உத்தரவு


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்மாநகரசபை எல்லைக்குள் இயங்கும் வெதுப்பகங்களில் உற்பத்தியாகும் பாண் முழுமையாக வேகாது தரமற்றதாக இருப்பதாக பல புகார்கள் தமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளமையினால் இரவு வேளைகளில் வெதுப்பகங்கள் மீது திடீர் சோதனைகளை மேற்கொள்ளுமாறும் யாழ். மாநகர ஆணையாளர் சி.வீ.கே.சிவஞானம் அறிவித்துள்ளார்.

மேலும் பொதுச்சந்தைகளில் வியாபாரிகளினால் பயன்படுத்தப்படும் தராசுப் படிகள் சீல் செய்யப்படாமலும் நிறை குறைவாகவும் இருப்பதை நேரில் அவதானித்ததன் காரணமாக திடீர் சோதனைகளை மேற்கொண்டு மரக்கறி மற்றும் மீன் வியாபாரிகளினால் அன்றாடம் பாவிக்கப்படும் தராசுப் படிகளை பரிசீலித்து முறையற்றவையாகக் காணப்படின் அவற்றைப் பறிமுதல் செய்யுமாறும் அவர் கேட்டுள்ளார்.

சுகாதார வைத்திய அதிகாரியூடாக சகல பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கும் கடந்த 7ஆம் திகதி இது தொடர்பாக ஆணையாளரால் பணிப்புரையும் வழங்கப்பட்டது.

இதேசமயம் ஆணையாளரின் பணிப்புரைக்கு அமைய பரிசோதகர்களால் நேற்று முன்தினம் வெதுப்பகங்களில் கூட்டுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் செங்குந்தா சந்தையில் மீன் விற்பனை நிறை தொடர்பாகவும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தராசுப் படி சம்பந்தமாக நிறுத்தல் அளவை திணைக்களத்திற்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. (க)



## சாயி அருளமுதம்

முஸ்லிம்களால் அல்லாவெனவும் கிறிஸ்தவர்களால் ஜெகோவா எனவும் வைஷ்ணவர்களால் புல்லாஜாக்ஷா எனவும் சைவர்களால் சம்பு எனவும் போற்றப்படுபவரும் அவர்கள் எங்கெங்கேயிருப்பினும் அவர்களுடைய பிரார்த்தனைகளைச் செவிமடுத்து ஆரோக்கியம் சுபீட்சம் சந்தோஷம் என்பவற்றை வாரி வழங்குப வருமான அவரே எல்லா மனித வர்க்கத்தினரதும் ஒரே கடவுளாவார்.

# மந்துவிலில் காணாமல் போன 8 இளைஞர்களின் நிலை என்ன?

## சர்வதேச மன்னிப்புச் சபை கேள்வி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் காணாமல்போன 8 தமிழர்களினது நிலை என்ன என்பதை தெரிவிக்குமாறு இலங்கை அரசாங்கத்தை சர்வதேச மன்னிப்புச் சபையான அம்னஸ்ரி இன்டர்நசனல் கேட்டுக்கொண்டுள்ளது.

மந்திகையில் கடந்த மே மாதம்6 திகதியன்று கோவில் ஒன்றில் உறங்கிக் கொண்டிருந்த இராசநாயகம்பிள்ளை சிவானந்தமூர்த்தி, மார்க்கண்டு புஸ்பகாந்தன், கந்தசாமி பரிமேழலகன் ,வைகுந்தவாசன் விகுந்தகுமார், இரட்ணம் தயாரூபன், பொன்னம்பலம் பார்த்தீபன்,செல்வரட்ணம் சிவானந்தம் மற்றும் இராமச்சந்திரன் இராசகுமார் ஆகியோர் காணாமல் போயினர்.

இது தொடர்பாக அவர்களின் உறவினர்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணை குழுவிடம் முறைப்பாடு செய்தனர். அம் முறைப்பாட்டில் கூறப்பட்டிருந்ததாவது,

சம்பவ நாளன்று 25 இற்கும் மேற்பட்ட படையினர் எதுவித காரணமும் இன்றி கோவில் பகுதிக்கு வந்தனர். அன்று அதிகாலை ஒரு மணியளவில் இராணுவ வாகனங்களின் சத்தமும் துப்பாக்கிச்சூடு சத்தமும் கேட்டது. அதன் பின்னர் இராணுவ வாகனங்கள் அங்கிருந்து சென்றுவிட்டன.

மீண்டும் அதிகாலை 4.30 மணிக்கு மேலும் இரு இராணுவ வாகனங்கள் அங்கு வந்ததையடுத்து மக்கள் அச்சமடைந்தனர். கோவிலில் உறங்கிக் கொண்டிருந்த 8 பேரினது நிலைமையை அறிய விடியும்வரை மக்கள் காத்திருந்தனர்.

காலை 6மணியளவில் கோவிலுக்குச் சென்றபோது அங்கு சில இராணுவத்தினர் நின்றிருந்தனர். இராணுவ வாகனமும் இருந்தது. பொதுமக்களைக் கண்ட அவர்கள் உடனே வரணி இராணுவ முகாமை நோக்கி சென்றனர்.

சம்பவம் நடந்த இடத்திலிருந்து 3 கிலோ மீற்றர் தொலைவில் இராணுவத்தின் 52-ம் படையணித் தலைமையகம் உள்ளது என்று அம்முறைப்பாட்டில் கூறப்பட்டிருந்ததாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

மேலும் 8 பேரினது சடலங்கள் இருப்பதாக கூறப்பட்ட இடத்துக்கு மனித உரிமைகள் ஆணைக் குழுவினர் சென்றபோது இரத்தக் கறைகள், வெற்றுத் தோட்டாக்கள் மற்றும் அடையாள அட்டைகள், கிழிந்த ஆடைகள் இருந்தமையை கண்டுள்ளனர் என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை கூறியுள்ளது.

காணாமல் போன 8 பேரின் நிலைமை என்ன என்பது தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் மன்னிப்புச் சபை கேட்டுக்கொண்டுள்ளது. (கு)

### கிராம அலுவலர் மீதான தாக்குதல்

## விசாரணை மேற்கொள்ளுமாறு யாழ்.அரச அதிபர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மத்தி கிராம அலுவலர்மீது கடந்த 9 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் உரிய தரப்பினரைக் கோரியுள்ளார்.

கோப்பாய் செயலர் பிரிவைச் சேர்ந்த கோப்பாய் மத்தி (ஜே/261) கிராம அலுவலர் ஜோ.இரத்தினராஜா கடந்த 9 ஆம் திகதி காலை 8 மணியளவில் அவரது வீட்டில் துப்பாக்கியால் சுடப்பட்டு காயமடைந்தார்.

இச் சம்பவம் தொடர்பாக யாழ்.பாதுகாப்பு தலைமை அதிகாரி, யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர், யாழ்.இலங்கை கண்காணிப்புக் குழு, யாழ்.சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம், பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஆகியவர்களுக்கு உடனடியாக அறிவிக்கப்பட்டதாக கூறியுள்ள அரச அதிபர், இது தொடர்பான பூரண விசாரணையை மேற்கொள்ளுமாறும் அவர்களை கேட்டுள்ளார்.

இதேவேளை இவ்வாறான சம்பவங்களினால் கிராம அலுவலர்கள் குழப்பமடைந்து இருப்பதோடு சிவில் நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் பாரிய கஷ்டங்களை எதிர்நோக்குவதாகவும் அறிவிக்கப்பட்டது. (ச)

### எழுதுமட்டுவாழ்...

சடலம் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவ இடத்திற்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரும் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினரும் சென்று சடலத்தை பார்வையிட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (ச–5)

### க.கா.குழுவின்...

புக்குழுவினருக்கு சட்ட விலக்கீட்டு உரிமையை வழங்க விரும்புகிறார்களா என்று நோர்வே அனுசரணையர்ளர்களினால் விடுக்கப்பட்டிருக்கும் கேள்வி பற்றி குறிப்பிட்ட அமைச்சர் இராஜதந்திர அந்தஸ்திலான விலக்கீட்டு உரிமை என்பது ஒரு இறைமையுள்ள அரசினால் மட்டும் பிரயோகிக்கப்படக் கூடியது என்றார். (ச–5)

## உலகக் கிண்ண உதைபந்தாட்ட இல.நேரப்படி இன்றைய போட்டி

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் ஏழாவது நாளான இன்று முதலாவது போட்டியாக ஈகுவடார் – கோஸ்டாரிக்கா ஆகிய அணிகளுக்கிடையில் இலங்கை நேரப்படி மாலை 6.30 மணிக்கு ஹம்பார்க் மைதானத்திலும்,

இரண்டாவது போட்டியாக இங்கிலாந்து – டிரினிடாட் ஆகிய அணிகளுக்கிடையில் இரவு 9.30 மணிக்கு நூர்ம்பேர்க் மைதானத்திலும்,

மூன்றாவது போட்டியாக சுவீடன் – பராகுவே ஆகிய அணிகளுக்கிடையில் நள்ளிரவு 12.30 மணிக்கு பேர்லின் மைதானத்திலும் நடைபெறும். (ச–5)

## ஸ்பெயின் இலகு வெற்றி

ஜேர்மனி உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் நேற்றைய முதற்போட்டியில் எச் பிரிவில் இடம்பெற்றுள்ள ஸ்பெயின் - உக்ரையின் ஆகிய அணிகள் மோதின.

இப்போட்டியில் ஸ்பெயின் நான்கு கோல் அடித்து வெற்றி பெற்றது. உக்ரையின் கோல் எதுவும் போடவில்லை.

நேற்றைய இரண்டாவது போட்டியில் எச் பிரிவு டுனிசியா - சவுதிஅரேபியா ஆகிய அணிகள் மோதின.

இறுதிவரை விறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் இரு அணிகளும் தலா இரண்டு கோல்கள் போட்டு ஆட்டத்தை சமப்படுத்தின. (ச–5)

### இராணுவம்...

அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.கல்வியங்காடு சந்திப்பகுதியில் யாழ்.பருத்தித்துறை வீதியில் சட்டநாதர் ஆலயம் அருகே பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய் மீது நேற்று பிற்பகல் 1.35 மணிக்கு துப்பாக் கிச்சூடு நடத்தப் பட்டுள்ளது. இதில் அவர் சம்பவ இடத்தி லேயே பலியானார். அவரது உடல் பலாலி இராணுவ மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. (ச–5,15)

### அமைச்சர்...

நோர்வே மன்னருடனான சந்திப்பு முடியும்வரை ஏறத்தாழ ஒரு மணிநேரம் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. தமிழ் மக்கள் மீது அப்பட்டமான படுகொலை வெறியாட்டங் களையும் மனித உரிமை மீறல்களையும் மேற்கொண்டு வரும் ஒரு பயங்கரவாத அரசின் பிரதிநிதியை நோர்வே மக்களின் சின்னமாகவும் நோர்வே தேசத்தின் சின்னமாகவும் விளங்கும் மன்னர் சந்திப்பது தமிழ் மக்களை கவலையடையச் செய்கிறது என்று ஆர்ப்பாட் டத்தில் கலந்து கொண்ட மக்கள் தெரிவித்தனர். (ச–5)

### கட்டுநாயக்கா...

துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், தமிழீழ காலவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன்,தமிழீழ சமாதான செயலகப்பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் உள்ளடங்கிய தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளே நேற்று பிற்பகல் 2.10 மணியளவில் கிளிநொச்சியை வந்தடைந்தனர்.

தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் ,தமிழீழ மாவீரர் பணிமனைப்பொறுப்பாளர் பொன்.தியாகம்,தளபதி வீமன் ,புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் நா.தமிழன்பன் ,தமிழீழ அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன், மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழினி உட்பட தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் வரவேற்றனர். (ச–5)

## முட்டுக்கட்டை, தடைகள் நீக்கப்படாமல்...

அதன் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு சு.ப.தமிழ்ச்செல்வன் அளித்த நேர்காணல்,

நோர்வே அரசின் அழைப்பை ஏற்று அதற்கு மதிப்புக் கொடுக்கும் முகமாகத்தான் நாங்கள் சென்றிருந்தோம்.

எமது தலைமைப்பீடத்தின் நிலைப்பாடுகளையும் சில முக்கியமான தீர்மானங்களையும் தெளிவுபடுத்தியிருக்கின்றோம். அதுதான் எமது பயணத்தின் நோக்கம். எமது பயணத்தின் நோக்கத்தை நிறைவு செய்து திருப்பியிருக்கின்றோம்.

எமது பயணம் வெற்றிகரமாக அமைந்தது என்று சொல்ல முடியாது. எமது நிலைப்பாடுகளை நோர்வே அனுசரணையாளர்களுக்கும் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் தெரியப்படுத்தவே சென்றோம்.

இந்தப் பயணத்தை அவர்கள் தங்களுக்குச் சாதகமாக ஒரு சர்வதேச அபிப்பிராயத்தை உருவாக்குவதற்கான பேச்சுவார்த்தையை நடத்த வேண்டும் என்று கூறினார்கள். நாங்கள் அதற்கு இணங்கவில்லை.

எங்கள் மக்கள் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றபோதும் எமது பிரதேசங்கள்மீது தாக்குதல் தொடுத்துக் கொண்டிருக்கக் கூடிய சூழ்நிலையிலும் பேச்சுக்களை நடத்துவதற்காக நாங்கள் நோர்வே செல்லவில்லை.

அரசாங்கத் தூதுக் குழுவுடன் பேச்சு நடத்தும் சூழல் இன்று இல்லை. பேச்சுவார்த்தைக்கான உகந்த சூழலை உருவாக்காமல் அரசாங்கத் தரப்போடு நேரடிப் பேச்சுக்களை ஒருபோதும் முன்னெடுக்க முடியாது.

இதைத் தெட்டத் தெளிவாக நோர்வே அனுசரணையாளர்களுக்குத் தெரிவித்துள்ளோம். நோர்வேயில் நாங்கள் நிற்கும்போது குழந்தைகள், மக்கள் என வயது வேறுபாடின்றி கொல்லப்பட்டனர்.

எங்களது போராளிகள், தளபதிகள் மற்றும் பொறுப்பாளர்கள் மீதான தாக்குதல் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு ஒரு யுத்த சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் அமைதி முயற்சிகள் அனைத்துமே கேள்விக்குறியாகியுள்ளது. நோர்வேக்கு நாங்கள் செல்வதற்கான காரணத்தை விளக்கியிருந்தபோதும் கூட எப்படியாவது ஒரு பேச்சுவார்த்தையை நடத்தி வெற்றிபெற்றுவிடலாம் என்று நோர்வே முனைந்தது.

ஆனால் அந்த முயற்சிக்கு நாங்கள் இடங்கொடுக்கவில்லை. எம்முள் உள்ள முட்டுக்கட்டைகள், தடைகள் நீக்கப்படாமல் நாங்கள் பேச்சுக்குச் செல்லமாட்டோம்.

ஐரோப்பியத் தடைக்குப் பின்னால் எம் மீது கடுமையான அழுத்தங்களைப் பிரயோகிக்கும் யுத்தியைக் கையாளுகின்றனர். இத்தகைய அழுத்தங்களைத் தருவதன் மூலம் தமிழர் தரப்பானது பணியும் நிலையில் இல்லை.

நோர்வேத் தரப்பானது இருதரப்பினருக்கும் அனுப்பியுள்ள ஐந்து கேள்விகளுடன் எமது தேசியத் தலைவருடன் கலந்து ஆலோசனை நடத்திய பின்னர்தான் முடிவெடுக்கப்படும்.

அர்த்தமற்ற அழுத்தங்கள் தமிழர் தரப்பையும் தமிழீழ விடுதலைப்புலிகளையும் ஒருபோதும் அடிபணியச் செய்து விட முடியாது.

நியாயமான நீதியான அணுகுமுறைகளும் நடுநிலையான செயற்பாடுகளும் எமது மக்களுக்கு நன்மையளிக்கக் கூடிய முன்னெடுப்புகளும்தான் தமிழர் தரப்பை சமரச முயற்சிகளுக்கு கொண்டு செல்லும்.

நோர்வேக்கு அதிகாரமற்ற - அனுபவமற்ற- நிதானமற்ற- சமரச முயற்சிகளுக்கு பக்குவமற்ற ஒரு குழுவை சிறிலங்கா அரசாங்கத் தரப்பினர் அனுப்பி வைத்திருந்தனர்.

அவர்கள் அரை நாளுடன் ஓடிவிட்டனர். இவ்வளவு கால சமரச முயற்சிகளில் ஒரு அநாகரியமான செயற்பாடு இது. அது பற்றி எங்களுக்குப் பிரச்சினையில்லை. எங்கள் பணியை நாங்கள் முடித்துவிட்டோம்.

அமைதி முயற்சிகளை சீர்குலைத்து எம் மீது போரைத் திணிப்பதற்கான செயற்பாடுகளில் அரசாங்கம் தீவிரம் காட்டிவருகின்றது. நாங்கள் சமரச முயற்சிகளை விரும்பினாலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் ஒரு கொடிய யுத்தத்தை - இனப்படுகொலையை நிகழ்த்தத் திட்டமிட்டுள்ளது. இதை நோர்வேயில் நாம் அம்பலப்படுத்தினோம்.

கடந்த நான்கு வருட காலத்தில் எமது தலைமைப்பீடம் மேற்கொண்ட நல்லெண்ண நடவடிக்கைகள் தொடர்பிலான முக்கியமான அறிக்கையை நாங்கள் நோர்வேயில் வெளியிட்டோம்.

அதேபோல் இப்போது நாம் எத்தகைய நிலைப்பாட்டில் இருக்கின்றோம் என்பதை சர்வதேச சமூகம் புரிந்துகொள்ளும் வகையில் விளக்கியுள்ளோம்.

நோர்வேயைப் பொறுத்தவரை இரு தரப்பை பேச்சுமேசையிலிருத்தி நற்பெயரை அடைய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள். அதனால்தான் நோர்வேயிடம் பேச்சு மேசையில் எங்களை இருத்துவதை விட்டுவிட்டு தடைகளை நீக்குவதற்கு முயற்சி செய்யுங்கள் என்று கூறியுள்ளோம்.

நாங்கள் விமான நிலையத்திற்கு வந்தபோது நீண்ட நேரம் எம்மைக் காத்திருக்க வைத்து சிரமப்படுத்தி அநாகரியமாக நடந்து கொண்டனர்.

இப்படியான செயற்பாடுகள் எல்லாம் இனி சமாதான முயற்சிகள் நடைபெற உதவாது. இருதரப்பு சமநிலையை சிறிலங்கா அரசாங்கம் ஏற்காவிட்டால் நாங்கள் அந்த நிலையை உருவாக்குவோம் என்றார் சு.ப. தமிழ்ச்செல்வன். (ச–5)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.06.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.